பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 12 செவ்வாய்க்கிழமை (28-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:308

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியே பொலிஸ் நிலையத்தில் தாக்கப்பட்டார்

## கைதி சித்திரவதைக்குள்ளாவதாகக் கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்கச் சென்றபோது சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 28

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி எஸ்.பெரோஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசகராகப் பணியாற்றும் ஐ.நா.அபிவிருத்தித்திட்டத்தின் அலுவலரான பற்றிக் ஆகியோர் நேற்று யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்துப் பொலீஸாரால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.**

**கைதி ஒருவர் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதாகக் கிடைத்த தகவல் குறித்து விசாரிப்பதற்காகப் பொலீஸ் நிலையத்திற்குச் சென்ற சமயமே இவர்கள் இருவரும் பொலீஸாரால் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

இந்தத் தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் சந்திரசேகர தெரிவித்ததாவது:-

இணுவில் பகுதியில் வைத்து, கல்வியங்காட்டைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சந்திரகுமார் (வயது 23) என்ற குடும்பஸ்தர் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என அவரது மனைவி எமது அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இந்தமுறைப்பாடு தொடர்பாக விசாரணை செய்ய எமது அலுவலக விசாரணை அதிகாரியான எஸ்.பெரோஸ் என்பவரை யாழ்.பொலீஸ நிலையத்துக்கு அனுப்பியிருந்தேன். அங்கு அவர் பொலீஸாரிடம் விசாரணையை மேற்கொண்டார்.

கைதுசெய்யப்பட்டவரைக் காட்டுமாறு அவர் பொலீஸாரிடம் கேட்டார்.

அச்சமயம் பொலீஸ்நிலைய மேல்மாடியில் ஒருவர் தாக்கப்படுவது போன்ற அவலக்குரல் கேட்டது. இதையடுத்து அங்கு சென்று பார்க்கப்போவதாக பெரோஸ் பொலீஸாரிடம் தெரிவித்தார். பொலீஸார் அங்கு செல்ல முடியாது

(16ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் கட்டணங்கள் வெள்ளியன்று உயர்வு

தனியார் பஸ்கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. அரசு, கட்டண அதிகரிப்பிற்கு இணங்கிவிட்டது. முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்ட புதிய கட்டணம் நடைமுறைக்கு வரும் எனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.

போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவும், தனியார் பஸ்கட்டண அதிகரிப்புக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

நேற்று மாலை அமைச்சருக்கும் தனியார் பஸ் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றது. அதன்போதே பஸ் கட்டண அதிகரிப்பில் உடன்பாடு காணப்பட்டது. இதனால் இன்று நள்ளிரவு முதல் மேற்கொள்ளப்படவிருந்த நாடுதழுவிய தனியார் பஸ் சங்கத்தின் வேலைப்பகிஷ்கரிப்பும் கைவிடப்பட்டது.

ஆகக்குறைந்த தனியார் பஸ் கட்டணமான மூன்று ரூபா ஐம்பது சதம் - முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் புதிய கட்டணத்தின்படி நான்கு ரூபாவாகும்.

ஆறு ரூபாவிலிருந்து இருபத்தேழு ரூபா

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு மந்திராலோசனைக்காக சுவிஸ் புறப்பாடு

### இன்று கிளிநொச்சியிலிருந்து வந்து நாளை பயணம்

கிளிநொச்சி,செப்.28

சுவிஸ் நாட்டில் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் சட்ட அறிஞர்களோடு நடைபெறவிருக்கும் மந்திராலோசனையில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு இன்று முற்பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து புறப்படுகின்றது.

ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு செல்லும் புலிகள் குழுவினர், நாளை காலை 7 மணிக்கு கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து சுவிஸ் புறப்படவிருக்கின்றனர்.

இக்குழுவில் தமிழ்ச்செல்வனுடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதானச் செயலகப் பணியாளர் புலித்தேவன், புலிகளின் குரல் பொறுப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வரதர் அணி உறுப்பினர் வல்லிசுந்தரம் மருதனார்மடத்தில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,செப்.28

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணியின் யாழ். மாவட்டப் பிரமுகரும் அந்த அமைப்பின் சார்பில் கடந்த 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டவருமான வல்லி சுந்தரம் (வயது 61) நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மருதனார்மடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ்.நகரில் இருந்து சுன்னாகத்துக்கு மோட்டார் சைக்கிளில் இவர் சென்று கொண்டிருந்த சமயம் மருதனார்மடம் சந்திக்கு அருகே மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத வேறு இருவர் அவரை வழிமறித்தனர் என்றும்-

வல்லிசுந்தரத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தபின் அவர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்றும் - கூறப்படுகின்றது.

நெஞ்சு, வயிறு, தொண்டை ஆகிய பகுதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் ஆலோசனைக் கவுன்ஸில்: தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடு சமாதானச் செயலகத்துக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

ஜனாதிபதி பிரேரித்துள்ள சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கவோ, அதன் கூட்டங்களில் பங்குபற்றவோ தமிழ்க் கூட்டமைப்பு தயாரில்லை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அரசின் சமாதானச் செயலகத்துக்கு நேற்று அறிவித்திருக்கின்றார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இந்தக் கவுன்ஸிலின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதியும் -

இக்கவுன்ஸிலுக்கு கட்சிப்பிரதிநிதி ஒருவரின் பெயரைச் சிபார்சு செய்யும்படி சமாதா

(16ஆம் பக்கம் பார்க்க)

# திரும்பவும் எகிறுகிறது விலைவாசி!

கொழும்பு,செப்ரெம்பர் 28

**அரசின் குழப்பமான பொருளாதாரக்கொள்கைகளால் நாட்டில் அடுத்துவரும் நாள்களில் விலைவாசி திரும்பவும் எகிறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.**

**எரிபொருள், மின்சாரம், தொலைபேசி, தண்ணீர்க் கட்டணங்கள் கிடுகிடுவென உயரும் நிலைமை உருவாகி வருகின்றது. அத்தியாவசியப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களின் விலைகளும் எக்கச்சக்கமாக உயர்ந்து வருகின்றன.**

இன்னும் சில தினங்களில் ரயில்வே, மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் ரயில்வேத் திணைக்களத்திற்கு மாதாந்தம் ஏற்பட்டுவரும் 9 கோடி ரூபா மேலதிக செலவினத்தைச் சமாளிப்பதற்காக ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் ரயில் கட்டணங்களை அதிகரிக்கவேண்டியிருக்கும் எனப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் டி.எஸ்.ஜயவீர அறிவித்துள்ளார். இதனால் 55 கோடி ரூபாவை வருமானமாகப் பெறமுடியும் என்றும் அவர் கூறுகின்றார்.

இதேவேளை, எரிபொருள் விலைகள் அதிகரிப்பால் மின் உற்பத்திச் செலவும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் மின்சாரக் கட்டண அதிகரிப்பு தவிர்க்கமுடியாதது என்று அபாய அறிவித்தலை மின்சார சபையின் சிரேஷ்ட ஆலோசகரான ரஞ்சித் பொன்சேகா விடுத்துள்ளார்.

மின்சாரசபைக்கு ஏற்பட்டுள்ள மேலதிக

(16ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் முளைக்கும் அப்பக் கடைகள் மாநகர சட்டத்துக்கு அமைவானவையா?

### அதிகாரிகளிடம் நீதிமன்றம் கேள்வி

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ். நகரப்பகுதியில் அமைக்கப்படும் திடீர் அப்பக்கடைகள் மாநகரசபையின் சட்டங்களுக்கு அமைவாக உள்ளனவா? அவற்றில் சுகாதார தரம் பேணப்படுகின்றதா?

இப்படியான கேள்விகளை நீதித்துறையினர் யாழ்.மாநகரசபையிடம் எழுப்பியுள்ளனர்.

யாழ்.நீதிமன்றத்தில் கடந்தவாரம் நடந்த ஆலோசனைக்கூட்டம் ஒன்றில் இக்கேள்விகள் எழுப்பப்பட்டன.

யாழ்.நீதிவான் ஆர்.பி.விக்னராஜா, மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், மாநகரசபை அதிகாரிகள் மற்றும் பல்வேறு திணைக்கள அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# நகரப் பாடசாலைகள் சிலவற்றின் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.28

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்குக் கிடைத்தன.

யாழ்நகரப்பகுதியில் உள்ள சில பாடசாலைகளிலிருந்து அதிபர்கள் மூலம் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு:-

**யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**
**சித்தியடைந்தோர் - 31**

வஷந்தனா வசந்தகுமார் (164), தர்மிலா படிவலிங்கம் (158), கஜகர்ணி ஞானசேகரம் (154), கேதாரணி ஒளிவண்ணன் (151), பிரசாந்தினி பஞ்சலிங்கம் (145), ரூபிகா சிவராமலிங்கம் (145), சாருஜா நவரட்ணவேலு (143), பவித்திரா பத்மநாதன் (142), மதுரா கனகநாயகம் (142), கிருசா தியாகராஜா (142), ஜானகி ஜெயச்சந்திரன் (142), தர்ஷிகா கருணராசன் (141), விணோஜிகா சிவலிங்கம் (140), கம்சிகா சபாநாயகம் (139), ஜெசீபா ஜெயானந்தராஜன் (137), விதுஷிகா கதிர்காமராசா (136), துளசிகா சிறிவாதன் (135), கனுசா சுப்பிரமணியம் (133), துசாரகா சசிகுமார் (133), அருந்தசா தர்மலிங்கம் (133), நிவேதா நிர்மலநாதன் (132), மாதங்கி கருணாகரன் (131), கோசலா கிருஷ்ணகுமார் (130), சுபஸ்திகா சுந்தரலிங்கம் (130), பிறிம்சி அந்தோனிக்குமார் (130), துளஷிகா ரவீந்திரராசா (129), தர்சினி வசிகரன் (128), கானப்பிரியா சுகுமாரசர்மா (128), கஜலட்சி மாணிக்கவாசகர் (128), லக்சிகா வாசுதேவன் (127), பிரியதாரணி இரத்தினசிங்கம் (127).

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**
**சித்தியடைந்தோர் - 14**

துளசி கங்காதரன் (160), அருள்திவ்யா அருள்நாயகம் (142), சிவதி நவரத்தினம் (141), பிரதீபா இந்திரகுமார் (136), டிலுஷி ஜயபாலசிங்கம் (136), மயூரி செந்தில்நாதன் (133), தாக்ஷாயினி யோகராஜா (132), கஸ்தூரி ஜெயகுமார் (131), சாருஜா பார்த்தீபன் (130), சுவேதா செல்வதாசன் (129), ஆரணி சிவகுமார் (129), டிரோணி அஞ்ஜலீன் மரியராஜா (129), லாவணயா பெரியசுமி (127), விதூர்சிகா ஜெயந்திகுமார் (126).

**சென்.ஜோண்ஸ் கல்லூரி**
**சித்தியடைந்தோர் -18**

சத்தியசீலன் சஜீவன் (161), தயாபரராஜா சாம்நிரோஜன் (157), நாகேந்திரன் சுகர்சனன் (153), தூயகுமாரன் பேர்னாட் திசாந்த் (147), பாலச்சந்திரன் கோஜப்பிரியன் (146), அருந்தவராஜா ஜனாதன் (146), கணேசரத்தினம் கோபிசாந் (142), விக்னேஸ்வரராஜா எழிலன் (140), மகேஸ்வரன் விந்தராகன் (139), ரகு சரவணன் (138), செங்கதிர்ச்செல்வன் சேயோன் (138), சத்தியசீலன் நீரஜன் (137), தனபால் மோகனப்பிரியன் (133), றொபேட் டீன் ஜெனிபேட் (133), ஜோசெப் பெனராஜ் ராகுல் (132), ஆனந்தகுமார் வாகீசன் (130), சந்தியாகு நிதுசன் (127), சிவனேசன் கவாஸ்கர் (124).

யாழ். மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகள் தொடர்ந்து உதயனில் வெளிவரும். (4-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முதலாம், 2 ஆம் வருட மாணவர்களையும் கற்கை நெறியைப் பூர்த்திசெய்யாத மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியத் தலைவர் வி.முருகதாஸ் கேட்டுள்ளார். (4-5)

# 'அரோகரா' கோஷம் உரத்து முழங்க வல்லிபுரநாதர் தேரில் வலம்வந்தார்

பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் இரதோற்சவம் நேற்று வானம் மப்பும் மந்தாரமாக இருந்தபோதும் பல்லாயிரக் கணக்கான அடியார்களின் 'அரோகரா' கோஷத்தின் மத்தியில் மிகவும் பக்தி பூர்வமாக நடந்தேறியது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் படையெடுத்து வந்து வல்லிபுர ஆழ்வாரைத் தரிசித்தனர்.

பறவைக்காவடிகள், காவடிகள், கரகங்கள் என்று ஆலயச் சூழல் எங்கும் பக்திமயமாகக் காட்சியளித்தது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு வல்லிபுரப்பெருமாள் தேரில் ஆரோகணித்து பக்தர்களின் 'அரோகரா' கோஷத்துடன் வீதியை வலம் வந்து 11 மணிககு இருப்பிடத்தை அடைந்தார்.

இன்று மாலை 5 மணிக்கு சமுத்திர தீர்த்தம் நடைபெறவுள்ளது. இத்திருவிழாவிற்கு செல்லும் பக்தர்களின் நன்மைகருதி இரவு பகல் என்று பாராது தனியார் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் என்பன போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4-5-173)

# அனைத்துப் பல்கலைக்கழகங்களும் நேற்றுமுதல் வழமைக்குத் திரும்பின

கொழும்பு,செப்.28

பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதால் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் நேற்று முதல் வழமைபோல் இயங்க ஆரம்பித்தன.

கல்விசார ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கவும், இதுவரை வழங்கப்படாமல் இருந்த சம்பள உயர்வுகளை வழங்கவும் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து நாடெங்கிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் கடமையாற்றும் கல்வி சாரா ஊழியர்கள் அனைவரும் நேற்றுமுதல் வேலைக்குத் திரும்பினர்.

"எங்களுடைய கோரிக்கையில் 90 வீதமானவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது எங்களுடைய போராட்டத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றி" என்கிறார் அனைத்துப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களின் இணைப்புச் செயலாளர் சாந்தபண்டார.

13 கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் கடந்த மூன்று வாரங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுவந்த அரை இறுதிப் பரீட்சைகளும் தடைப்பட்டன.

இவ்விடயம் தொடர்பாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டை அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே கல்விசார ஊழியர்கள் நேற்று வேலைக்குத் திரும்பினர். பல்கலைக்கழகங்கள் இயங்கத் தொடங்கியிருப்பதால் ஏற்கனவே விடுதிகளை விட்டு வெளியேறிய மாணவர்கள் அனைவரும் இன்று செவ்வாய்க்கிழமை தமது விடுதிகளுக்குத் திரும்பிவடவேண்டும் என்று பல்கலைக்கழகங்கள் அறிவித்துள்ளன. வழமையான விரிவுரைகள் இன்று அல்லது நாளை முதல் ஆரம்பிக்கப்படும் என்றும, தடைப்பட்ட பரீட்சைகளும் நடைபெறும் எனவும பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் கூறினார். (க-3)

# மகளிர் எழுச்சிச் சங்கமத்தில் பெண்கள் பிரச்சினைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட மகளிர் அமைப்புகளின் எழுச்சிச் சங்கமம் நிகழ்ச்சி கடந்த சனியன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்ட இந்த நிகழ்வில், மாதர் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

சங்கமம் நிகழ்வுக்கு இ.யாழினி தலைமை வகித்தார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், திருமதி பத்மினி சிதம்பரநாதன், திருமதி வேதவல்லி ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கருத்துரையாற்றினார்.

சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்ட மாதர் சங்கப்பிரதிநிதிகள் பெண்கள் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைத்தனர்.

கலாசாரச் சீரழிவு, பாதுகாப்பின்மை, இளவயது திருமணம், தொழில்வாய்ப்பின்மை, மாதர் அமைப்புக்களின் நிகழ்ச்சிகளில் பெண் உறுப்பினர்கள் பங்குபற்றாமை, பொது வேலைகளில் பெண்களின் ஈடுபாடு குறைதல் போன்ற விடயங்கள் பற்றிக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

சங்கம நிகழ்வுகள் தொடர்ந்து மாவட்டங்கள் தோறும் நடைபெறவுள்ளன. (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.28

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 14 வயதுக்குட்பட்டோருக்கான அஸ்ரா வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் காலிறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து கந்தளாய் மத்திய மகாவித்தியாலயம் மோதவுள்ளது. (4-5)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்று வந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் மற்றும் 3 ஆம் இடத்திற்கான ஆட்டம் என்பன இன்று காலை 8.30 மணிமுதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

14,16,18 வயதுப் பிரிவினர்களுக்கிடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (4-86)

# களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் வெள்ளம்; 3,000 குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி வெளியேறின

கொழும்பு,செப்.28

கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சுமார் மூவாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன.

கம்பஹா, களுத்துறை மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களே வெள்ளம் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கம்பஹா களுத்துறை மாவட்டங்களில் சுமார் 3 ஆயிரத்து 200 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என அந்த மாவட்ட செயலாளர்கள் தெரிவித்தனர்.

கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல ஓயா, ஊடுருவல ஓயா, தண்டுகம ஓயா போன்ற ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன.

இதனால், அத்தனகல, மீரிகம, வெயாங்கொட, நித்தம்புவ ஆகிய இடங்களில் தாழ் நிலப்பிரதேசங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. களுத்துறை மாவட்டத்தில் பேருவளை, பாணந்துறை, களுத்துறை, பண்டாரகம, புளத்சிங்கள, மொரன்தொடுவ போன்ற இடங்களில் தாழ்நிலப்பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன.

களுகங்கையின் நீர்மட்டம் நான்கு அடிகளுக்கு மேல் உயர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. பேருவளையில் வளத்துவ, டில்ஹேன, மாக்கொன, முல்ஹேன போன்ற பகுதிகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன. பாணந்துறையில் 600 குடும்பங்களும் பேருவளையில் 200 குடும்பங்களும் பண்டாரகமையில் 24 குடும்பங்களும் களுத்துறையில் 175 குடும்பங்களும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துள்ளன. நேற்று நண்பகல் பௌத்த விகாரைகளிலும் பாடசாலைகளிலும் அவர்கள் தங்கவைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை மாவட்டச் செயலாளர் ஜயந்த திசாநாயக்க மற்றும் மேலதிக செயலாளர் ஹேமபால அப்பு ஆராச்சி ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமைத்த உணவுகள் மற்றும் உலர் உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகளில் தொலைபேசி மற்றும் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பிரதான வீதிகள் வெள்ளத்தால் மூடப்பட்டிருப்பதால் போக்குவரத்துக்ளும் தடைப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் 27 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அதைப் போன்று கம்பஹா மாவட்டத்திலும் நாற்பதுக்கும் மேற்பட்ட உயர்தரப் பாடசாலைகள் உட்படப் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இருவர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்திலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தால் மூடப்பட்டிருந்த போதும் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய காத்தான்குடி, சேத்துக்குடா, பூம்புகார், பாலமீன் பாலமுனை, களுதாவளை போன்ற இடங்கள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன. (க-3)

சரித்திரப் பிரசித்திபெற்ற வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக நடந்தேறியது.

தேர்த்திருவிழாவின் சில காட்சிகளைக் கீழுள்ள படங்களில் காணலாம்.

*படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்.*



# தவறான தகவலின் அடிப்படையிலேயே ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டதாம்!

## பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஒப்புக்கொள்கிறார்



லண்டன்,செப்.28

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள தவறாகிவிட்டன. ஆனால், அந்நாட்டில் இருந்து தற்போது படைகளை விலக்கிக் கொள்வது பயங்கரவாதிகளிடம் சரண் அடைவது போலாகிவிடும்.

- இவ்வாறு பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயர் கூறியுள்ளார்.

பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு பிளயர் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

புலனாய்வுத் துறையினர் அளித்த சில தகவல்களைக் கொண்டு ஈராக் போரை நியாயப்படுத்தினோம். அந்தத் தகவல்கள் தவறானதாகிவிட்டன. ஆனால், ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சியைக் கவிழ்த்தது சரிதான். கூட்டணிப்படைகளை இப்போது வாபஸ் பெற்றால் பயங்கரவாதிகளிடம் சரணடைந்தது போலாகிவிடும்.

போருக்குப் பிறகு ஈராக்கில் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்துத் திட்டமிடுவதில் தவறு ஏதும் ஏற்படவில்லை. ஆனால், வெளிநாட்டில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பயங்கரவாதிகள் ஈராக் வந்திருப்பது எதிர்பாராதது என்று அவர் சொன்னார்.

இதுவரை ஈராக் மீதான போரை நியாயப்படுத்திய பிளயர் இப்போது பல்டி அடித்திருப்பது உலகத் தலைவர்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-8)

## பங்களாதேஷில் கடும் வெள்ளம்

டாக்கா,செப்.28

பங்களாதேஷின் தென்மேற்குப் பகுதியில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. 80 கிராமங்கள் வெள்ளநீரால் சூழப்பட்டுள்ளன.

வெள்ளநீரால் கிணறுகள் மூடப்பட்டதால் பாதுகாப்பான குடிதண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தொற்று நோய்கள் ஏற்படும் ஆபத்து உருவாகியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும் நீரும் வழங்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

பங்களாதேஷ் வெள்ள அனர்த்தத்தில் பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளது. பல பொதுமக்கள் தமது சொந்த வீடுகளை இழந்துள்ளனர். (க-8)



புதுடில்லியைச் சேர்ந்த மது அக்ரவால் பத்திரிகைகளுக்கு ஒரே ஆண்டில் மிக அதிக எண்ணிக்கையில் வாசகர் கடிதம் எழுதி உலக சாதனை படைத்துள்ளார். இதற்காக கின்னஸ் நிறுவனம் அளித்த சான்றிதழுடன் காட்சி தருகிறார் அவர்.

## பயங்கரவாதப் பட்டியலிலிருந்து ஈராக்கை நீக்கினார் அமெ. அதிபர்

ஈராக்கிலிருந்து சதாம் ஹுசைன் வெளியேற்றப்பட்டதையடுத்து பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து அந்நாட்டை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நீக்கியுள்ளார்.

ஈராக் அரசின் தலைமையும் கொள்கைகளும் மாறிவிட்டன. சர்வதேச பயங்கரவாதத்திற்கு அந்நாட்டு அரசு ஆதரவு அளிக்காது. அந்நாட்டு அரசும் அதற்கான உறுதியை அளித்துள்ளது என்று புஷ் தெரிவித்தார்.

1990 இல் ஈராக் முதன்முறையாக அமெரிக்காவின் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில இடம்பெற்றது. ஈராக்கைத் தவிர தற்போது அந்தப் பட்டியலில் வடகொரியா, சூடான், சிரியா, ஈரான், கியூபா, லிபியா ஆகிய நாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## சூடானில் ஆயுதக் குவியல் கண்டுபிடிப்பு

சூடான் நாட்டில் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு 38 அரச அதிகாரிகளைக் கடத்திக் கொல்ல எதிர்க்கட்சியான பாப்புலர் காங்கிரஸ் திட்டம் தீட்டியது. இதற்குப் பயன்படுத்துவதற்காக தலைநகர் கார்ட்டுமிலுள்ள முக்கியமான இடங்களைத் தகர்ப்பதற்காககவும் பெரும் ஆயுதக்குவியலை மறைத்துவைத்திருந்தது. அதை இராணுவ வீரர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதனால் எதிர்க்கட்சியின் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

300 துப்பாக்கிகள், கைபெறிகுண்டுகள் ஆகியவை கண்டுபிக்கப்பட்டுள்ளன. 70 பேரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

சூடானில் உள்நாட்டு யுத்தம் கடந்த 20 ஆண்டுகளாக நடந்து வருகின்றது. இனப்படுகொலை நடத்தப்படுவதைத் தடுத்துநிறுத்தாவிட்டால் சூடான் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படும் என்று ஐ.நா.சபை எச்சரிக்கை விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(க-8)

உலக அரங்கில்

## ஒஸாமா பின்லேடன் பற்றிய தகவல்கள் தனக்குத் தெரியாதென்கிறார் பாக். அதிபர்



நியூயோர்க்,செப்.28

சர்வதேசப் பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனைப் பற்றிய தகவல்கள் எதுவும் தனக்குத் தெரியாது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவரைப் பிடிக்கமுடியும் என உறுதியாகக் கூறமுடியாது என பாகிஸ்தான் அதிபர் முஷரப் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் பின்லேடன் பிடிபட்டு விடுவார் என அமெரிக்காவில் பரவலாகப் பேசப்படுகிறது. இதுபற்றித் தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என செய்தியாளர்கள் முஷாரப்பிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து வெளியிடுகையில் -

சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள பின்லேடன், கண்டுபிடிக்கமுடியாத நடமாடும் மனிதர். அவர் எங்கு பதுங்கியிருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியாது. அமெரிக்கத் தேர்தலுக்கு முன் அவர் பிடிபட்டு விடுவார் என்று கூறமுடியாது.

பின்லேடன் எங்கே இருக்கிறார் என்று யாரும் கணிக்கமுடியாது. அவர் பிடிபட்டுவிட்டாலும் மறைக்கமுடியாது.

ஒன்றை மட்டும் நான் உறுதியாகக் கூற முடியும். பின்லேடன் சாகவில்லை. உயிரோடு இருக்கிறார். அவரை உயிரோடு பிடிக்க முடியுமா? அல்லது அவரைப் பிணமாகத்தான் கைப்பற்றமுடியுமா என்பதையும் உறுதியாகக் கூறமுடியாது.

இந்தப் பூமியில் மலைப்பகுதிகள் அதிகம் உள்ளன. அவை மறைந்துகொள்ள மிக வசதியாக இருக்கின்றன. பாகிஸ்தானில் பின்லேடனைப் பிடிக்கப் பலமுறை முயன்றோம். ஆனாலும், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பாகிஸ்தானில் தீவிரவாதத்தை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறேன். பாகிஸ்தானிலுள்ள சர்வதேச தீவிரவாதத்தை அடக்குவோம். ஆனால், இதை ஒரேநாளில் செய்ய முடியாது. காஷ்மீர் பிரச்சினையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இதை நானும் பிரதமர் மன்மோகன் சிங்கும் வெளியிட்ட அறிக்கை வெளிப்படுத்துகிறது. அடுத்த கட்டப் பேச்சு மன்மோகன் சிங் தொடங்குவார் என்று நான் எதிர்பார்த்தேன்.

நான் இராணுவத் தளபதி அதிபர் ஆகிய இரு பதவிகளை சட்ட அங்கீகாரத்துடன் வகித்து வருகிறேன். எனவே, இராணுவத் தலைமைப் பதவியை விட்டுவிடவேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

என்னைக் கொல்ல இருமுறை முயற்சி நடந்தது. அதில் நான் தப்பிவிட்டேன். நான் போர் முனைகளைச் சந்தித்தவன். ஆபத்துக்களைக் கண்டு அஞ்சமாட்டேன். தீவிரவாதத்தை நான் எதிர்க்கத் தொடங்கியதால் என்மீது தீவிரவாதிகள் குறிவைத்தனர். ஆனாலும், நான் பின்வாங்கமாட்டேன் - இவ்வாறு முஷாரப் கூறினார். (க-8)

## காதல் மாளிகைக்கு நேற்றோடு வயது 350



காதலின் உன்னதச் சின்னமாக யமுனை நதிக்கரையில் கம்பீரமாக நின்றிருக்கும் பளிங்கு அற்புதம் தாஜ்மஹாலுக்கு நேற்றோடு 350ஆவது பிறந்த நாள்.

முகலாயக் கட்டடக் கலையின் உச்சநிலையை எட்டிய தாஜ்மஹால் அழியாக் காதலின் அடையாளச் சின்னமாக உலகெங்கும் புகழ் ஒளி பரப்பிக்கொண்டிருக்கிறது.

காதல் மனைவி மும்தாஜின் நினைவுகளை ஒவ்வொரு பளிங்கிலும் செதுக்கிச் செதுக்கி ஷாஜகான் கட்டியெழுப்பிய மஹால், உலக அதிசயமாக மாறியதில் வியப்பொன்றும் இல்லை.

பார்க்கும் ஒரு கணத்திலேயே அற்புதத்தையும் - ஆனந்தத்தையும் - அதிசயத்தையும் ஏற்படுத்தும் தாஜ்மஹாலுக்கு ஆக்ராவில் நேற்று மாபெரும் விழா எடுக்கப்பட்டது. தாஜ் மஹாலின் அழகிய தோற்றத்தைப் படத்தில் காண்கிறீர்கள். (க-8)

## ஹமாஸ் முக்கியஸ்தர் சிரியாவில் கொலை!

சிரியாவின் தலைநகர் மஸ்கஸில் நடந்த ஒரு குண்டுவெடிப்பில் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான ஹமாஸின் முன்னணி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தொட்டால் வெடிக்கவைப்பது போன்ற பொறி அமைந்த குண்டொன்று வெடித்ததில் இஸ்ஸதீன் கலீல் என்பவரின் கார் அழிக்கப்பட்டு அவரும் கொல்லப்பட்டார் என நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். வேறு மூன்று பேர் இக்குண்டுவெடிப்பில் காயமடைந்தனர்.

இஸ்ரேலிய உளவுத்துறையே இஸ்ஸத்தினைக் கொன்றதாக ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

இச்சம்பவம் பற்றி இஸ்ரேல் இதுவரை கருத்து எதுவும் வெளியிட்டிருக்கவில்லை என்றாலும் சென்ற மாதம் இஸ்ரேலில் நடந்த தற்கொலைத் தாக்குதலையடுத்து ஹமாஸ் தலைவர்களை எங்கு கண்டாலும் தாக்குவோம் என அது எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கொலைக்கு பழிக்குப்பழிவாங்கும் வகையில் இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவின முக்கிய புள்ளியான இஸ்ஸதீன் கலீல், காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலால் விரட்டப்பட்டதன் பிறகு டமாஸ்ஸில் வாழ்ந்து வந்தவர். (க-8)

## பிரான்ஸ் பிரஜை ஒருவர் சவூதியில் சுட்டுக்கொலை!

ஜித்தா,செப்.28

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் வைத்து பிரான்ஸ் பிரஜை ஒருவர் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை சவூதி அரேபியாவின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கும் நோக்கில் அல்கெய்டா தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று பல்பொருள் அங்காடிக்குச் சென்ற இந்நபர் பொருள்களை வாங்கியதன் பின்னர் தனது வாகனத்தில் ஏறும்போது அடையாளம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்.

விசாரணைகளை ஜித்தா பொலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். சந்தேகநபர்களைத் தேடி அவர்கள் நகரின் பல இடங்களில் வலைவிரித்துள்ளனர். (க-8)

## ஆப்கானில் தலிபான் தளபதி சுட்டுக்கொலை!

ஆப்கானிஸ்தானில் தலைமறைவாகச் செயற்படும் தலிபான் தீவிரவாத இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான மௌலவி கபால், உருஸ்கான் மாநிலத்தில் உள்ள கிராமத்தில் 2 ஆதரவாளர்களுடன் நடந்து சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாத எதிர்ப்பு யுத்தத்தை அமெரிக்கா தொடங்கியபோது [illegible] இவர் கியூபாவில் உள்ள அமெரிக்க இராணுவச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து விடுதலையான பிறகு ஆப்கானிஸ்தான் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்குண்டு. மற்றும் பொதிசெய்யப்பட்ட (ஐஸ்) கோழியும் விற்பனைக்குண்டு. மலிவு விலையில் வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு:T.கரன், 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (36855)

ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், VCRகள், சலவை இயந்திரங்கள், VCD Players, அம்பிளிபயர்கள், கொம்பியூட்டர்கள், அதன் உதிரிப் பாகங்கள் மிகவும் மலிவான விலையில் விறபனைக்கு உண்டு. தொடர்பு: 024 222 4402, 0776 309910, 0773 039649. (சி36592)

## காணி விற்பனைக்கு

26 பரப்புத், தென்னங்காணியுடன் வீடும், அதற்கருகில் 4 பரப்புக் காணியுடன் வீடும் சகல வசதிகளுடன் யாழ்.கண்டிவீதியில் (A9 பாதை) விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க: ஜீவோதயம், கண்டி வீதி, மிருசுவில்.(36910)

இலக்கம் 400, நாவலர் வீதியில் வீட்டுடன் கூடிய காணி 3 பரப்பு 5.5 குழி கைலாச பிள்ளையார் கோயிலடியில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 400, நாவலர் வீதி. நேரம் காலை 11 மணி- பிற்பகல் 4 மணிவரை. (36916)

## பழைய வீடு விற்பனைக்கு

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும், வீடுகட்ட முற்படுவோருக்கும் அரியவாய்ப்பு. கூரை, கதவு, நிலை முதலியன நல்ல நிலையில் உள்ள ஓட்டுவீடு மலிவுவிலையில் உண்டு. தொடர்பு: ம.கங்காதரம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (36930)

## தவறிவிட்டது

சண்முகலிங்கம் கஜேந்திரன் (790246012V) என்பவரது தேசிய அடையாள அட்டை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் 05.09.2004 ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 44/4, லோட்டஸ் றோட், வண்ணார்பண்ணை மேற்கு, யாழ். எனும் முகவரியில் தந்துதவவும். (36929)

26.09.2004 ஞாயிறு அரியாலைக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில் நாவலர் வீதியில் கையடக்கத் தொலைபேசியொன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கு. பாலகுமாரன், இல.20, மணிக்கூட்டு வீதி, யாழ். எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (36927)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 29-09-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.: 3529. றஞ்சீத் 517, ஸ்ரான்லி றோட், தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக. (36908)

## கோழிக்குஞ்சு விற்பனை

தரமான Prima Broiler பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (36932)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,செப்.28

ஜே/72 சின்னக் கடை, ஜே/73 யாழ். நகர் மேற்கு, ஜே/74 யாழ்.நகர் கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.அடைக்கல மாதா ஆலய (ஓ.எல.ஆர்.) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தங்களிடமுள்ள ஆவணங்களுடன் பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டைகள் என்பவற்றையும் கொண்டு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார். (4-202)


## Commencement of Term - 2004/2005

The Term for the 2nd MBBS Students (27th Batch) scheduled for 4th October 2004, has been postponed to 3rd January 2005. The Term for the 3rd MBBS Course will commence on 4th October 2004 as scheduled.

**Registrar,**
**University of Jaffna.**
27.09.2004. (C/37870)(42-34-11-44)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்
திரு. K.சதானந்தன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி K.ஜெயலக்சுமி**
மறைவையொட்டித் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

யா/தாதிய உத்தியோகத்தர்
நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.
(36924)(34-39-11-44)

## பெயர் மாற்றம்

உடுவில், உதயசூரியன் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுண்டுக்குளி, ஈச்சமோட்டை முதலாம் ஒழுங்கைப் பகுதியை (இல.5/3) வதிவிடமாகவும் கொண்ட
**நாகலிங்கம் இராசன்** ஆகிய எனது பெயரை
**நாகலிங்கம் இராஜன்**
எனக் கடந்த 30-09-2004 இல் இருந்து சட்டப்படி மாற்றியுள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன்.


5/3, முதலாம் ஒழுங்கை,
ஈச்சமோட்டை, சுண்டுக்குளி.

தகவல்:
நா.இராஜன்

(சி-37871) (26-34-11-44)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
06 - 11 - 1923



உதிர்வு
29 - 08 - 2004

## அமரர் சடையன் இலட்சுமணன்

எம் இல்வாழ்வின் ஒளிவிளக்கே! எம்மையெல்லாம்
நேர்மை நெறியில் நிலைநிறுத்திய அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சந்நிதி முருகனின் திருவடிகளில்
சாந்தியடைய அவனையே வேண்டி நிற்கின்றோம்.

அமரரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசிமூலம் இரங்கல்தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (28-09-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"செல்வமஹால்",
உடுப்பிட்டிப் மேற்கு, உடுப்பிட்டி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (36926) (26-34-11-44)

## மாவீரர் மண்டபத்துக்கு அடிக்கல்

செம்பியன்பற்று,செப்.28

வடமராட்சி கிழக்கு மாவீரர் மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வத்திராயன் பகுதியில் இடம்பெற்றது.

மாவீரர் செயற்பாட்டுக்குழு உறுப்பினர் சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரரது பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மாவீரர் மண்டப அடிக்கல்லினை வடமராட்சிக் கிழக்கு கோட்ட கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழேந்தியும் வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புக்குழுத் தலைவரும் நாட்டி வைத்தனர்.

சிறப்புரையை வடமராட்சி கோட்டக்கல்வி கழகத்தை சேர்ந்த தாயகன் நிகழ்த்தினார். (4-36)


## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூபா 4000 முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna
Phone: 0773 068968
(சி-37511)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenace and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968
(சி-37842)


# மரண அறிவித்தல்கள்

## கஸ்மீர் அந்தோனிமுத்து

குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கஸ்மீர் அந்தோனிமுத்து 2004-09-25 அன்று அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

இவரது இறுதிச் சடங்குகள் 2004-09-25 சனிக்கிழமை புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் குளமங்கால் புனித சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள: அ.றோசறி ஜெயநாயகி
(அதிபர் யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை, சுன்னாகம்),
மகள: அ.யூலியஸ் ஜெயரட்ணம்
(அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்).

குளமங்கால்,
மல்லாகம்.
(36940) (26)

## தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்



அரியாலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்கள் நேற்று (27-09-2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சறோஜினியின் (இலங்கை மின்சார சபை, வடபிராந்திய அலுவலகம்) அன்புக் கணவரும் உதயணன் (லண்டன்), துளசி ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(36934) (26)

தகவல்:
சறோஜினி (மனைவி).

## திருமதி மேரிபுளோறன்சியா (பவுண்) கிறிசாந்தூஸ்



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிபுளோறன்சியா (பவுண்) கிறிசாந்தூஸ் அவர்கள் நேற்று (27-09-2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனவல் கிறிசாந்தூஸ் (ஓய்வுபெற்ற தபால் அதிபர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கிளமெண்டா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனவல் - தங்கராசம்மாவின் அன்பு மருமகளும் நெவில் (சவூதி), யூட் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயஜீவிதா (யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருட மாணவி) அவர்களின் அன்பு மாமியாரும் லெயிற்றன் (சவூதி), ஜீவா, கௌரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனவல் கிறிசாந்தூஸ் (கணவர்).

10, அடப்பன் றோட்,
2ஆம், ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
T.P.: 0776510136.
(36935) (26-34-11-44)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
07 - 09 - 1939



உதிர்வு
10 - 10 - 2003

அமரர்

## வேலுப்பிள்ளை வாமதேவன்

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளர்)

மனிதப் பிறவி எடுத்து மாணிக்கமாய் திகழ்ந்தீர்!
புனிதப் பணி செய்து புகழுடன் திகழ்ந்தீர்!
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம் துயர்
தேடுகின்றோம் உங்கள் பாசத்தை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
(36937) (34-11-44)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

**இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் 2003/2004**

1. முகாமைத்துவ கற்கைகள் பீடத்தில Bad/B.Com. முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் மீண்டும் எதிர்வரும் 04.10.2004 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

**இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2003/2004**

நிர்வாகமாணி, வணிகமாணிப் பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாகும்

1. நான்காம் வருடம் (பகுதிIII) - 18.10.2004
2. மூன்றாம் வருடம் (பகுதிII) - 01.11.2004
3. இரண்டாம் வருடம் (பகுதிI) - 15.11.2004

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
27.09.2004. (C/37869)(42-34-11)

உதயன்

# ஆளும் கூட்டமைப்புக்குள்தான் நல்லிணக்கம் தேவை

"சமாதானம், நல்லிணக்கம் என்பனவற்றுக்கான தேசிய ஆலோசனைக்குழு ஸ்தாபிப்பது தொடர்பாக ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு எழுத்து மூலம் பதிலளித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு முதலில் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பியுங்கள். பேச்சு நடைபெறும்போது எழும் உபவிவகாரங்கள் தொடர்பில் ஆராய்வதற்குத் தேவைப்படும் போதுதான் இத்தகைய ஆலோசனைக் கவுன்ஸில் பொருத்தம்" - என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

விடுதலைப் புலிகளுடனான தற்போதைய சமாதான முயற்சிகளை ஆரம்பித்தது அவரது அரசுதான். தற்போது சுமார் இரண்டரை வருடங்களுக்கு மேல் நின்று, நிலைத்துத் தாக்குப்பிடிக்கும் யுத்தநிறுத்தத்துக்குக் காரணமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை அரசின் சார்பில் விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்டவர் அவர்தான். தலைவர் பிரபாகரனுடன் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவரே அவர்தான்.

இன்று நாடாளுமன்றத்தில் அவரது கட்சி எதிரணியில் இருக்கலாம். ஆனால், நாடாளுமன்றத்தில் தனித்து அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சியின் தலைவர் அவர்தான். அதுமட்டுமல்ல. அவர்தான் நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர். மாற்று அரசு அமைக்கும் வாய்ப்பும் தகுதியும் உள்ளவரும் அவரே.

எனவே, நாட்டின் மிகமுக்கியமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் தனது கூட்டமைப்புப் பங்காளிகளின் அழுத்தத்தைவிட, எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கு மதிப்பும் முக்கியத்துவமும் கொடுப்பதே நாட்டின் தலைவிக்கு - அரசுத் தலைவிக்கு - நல்லது; பொருத்தமானது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தற்போதைய அமைதி முயற்சிகளின் கீழ் சமாதானப் பேச்சுக்கள் 2002 செப்ரெம்பரில் ஆரம்பமான போதே அரசுத்தரப்பும், தமிழர்கள் தரப்பில் அவர்களது - அதிகார பூர்வ - ஏகப்பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளும் ஒரு விடயத்தில் இணக்கம் கண்டனர்.

யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்குத் தமிழர்களின் அன்றாட - அவசர - தேவைகளையும் மனிதாபிமானப் பிரச்சினைகளையும் கையாண்டு, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஓர் இடைக்கால ஏற்பாடு அவசியம் என்பதே அந்த இணக்கப்பாடு.

அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்களின் போது சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. 'சிரான்' என்ற பெயரிலும் வேறு பெயர்களிலும் சில அமைப்புகளை ஏற்படுத்த இசைவு காணப்பட்டது. அவை ஸ்தாபிக்கப்பட்டன. எனினும், அவை நடைமுறையில் பலன் தராமையால் மாற்று ஏற்பாடுகளின் அவசியம் உணரப்பட்டது. முழு அளவிலான ஓர் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதன் கட்டாயம் வலியுறுத்தப்பட்டது.

அரசும், புலிகளும் அந்த நிலைமையை ஏற்றுக்கொண்டதால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான சில முன்மொழிவுகள் அப்போதைய அரசினால் முன்வைக்கப்பட்டன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் எதிர்பார்ப்பையும் அபிலாஷைகளையும் நிறைவு செய்யும் யோசனைகளாக அவை இல்லாததால் தமிழர் தரப்பு தானே ஒரு யோசனையை முன்வைத்தது.

அந்த யோசனைகளின் அடிப்படையில் பேச அப்போதைய இலங்கை அரசும் இணங்கியது.

இந்த நிலையில்தான் ஆட்சியிலிருந்த அரசிடமிருந்து மூன்று முக்கிய அமைச்சுக்களைப் 'பிடுங்கி' எடுத்து, அதன்மூலம் சமாதான முயற்சிகளிலேயே மண்ணை அள்ளிப் போட்டார் நாட்டின் தலைவி.

இப்போது பேரினவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து மாற்று அரசை அமைத்துவிட்ட அவர் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்காமல் போக்குக்காட்டி வருகின்றார்.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்கும் கட்டம் வரை சமாதான முயற்சிகளை முன்னைய ஐ.தே.முன்னணி அரசு இழுத்து வந்து, அந்த நிலையில்தான் விட்டுச் சென்றிருக்கின்றது. அது மட்டுமல்ல, அந்த இடத்திலிருந்து அமைதி முயற்சிகளை தற்போதைய அரசு தொடர்வதற்கும் முழு ஆதரவு என்று ஐக்கிய தேசிய முன்னணி - எதிர்த்தரப்பில் இருந்தவாறே - பகிரங்கமாக அறிவித்துவிட்டது. மீண்டும் தனது இந்த நிலைப்பாட்டை அது வலியுறுத்தியும் வருகிறது.

ஆனால், பேரினவாதிகளை தனது அணியில் சேர்த்துக் கொண்டு, அதன் மூலம் அரசை அமைத்திருக்கும் ஜனாதிபதி - தனது அரசைத் தாக்குப்பிடிக்க வைப்பதற்கு பேரினவாதிகளில் தங்கியிருக்கும் ஜனாதிபதி - அந்தப் பேரினவாதிகளின் தீவிரப் போக்கினால் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க முடியாதவராக அல்லாடுகின்றார்.

அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க இப்போது தேவைப்படுவது - அவசரமாகவும் அத்தியாவசியமாகவும் தேவைப்படுவது - தேசிய நல்லிணக்கம் அல்ல. அதற்கு முன்னர் ஆளும் கூட்டமைப்புக்குள் நல்லிணக்கம். அதை எட்டமுடியாது என்பதை நன்கு உணர்ந்துள்ள ஜனாதிபதி அதனால் தன் மீதும் தமது தரப்பின் மீதும் விழக்கூடிய பழியை - கெட்ட பெயரை - தவிர்த்துச் சமாளிப்பதற்கும் நேரத்தை இழுத்தடிப்பதற்கும் 'தேசிய நல்லிணக்கம்' என்ற கதையை அவிழ்த்துவிட முயல்கின்றார்.

எனவே, 'தேசிய நல்லிணக்க' புளுடாக்களை விட்டுவிட்டு, தீர்வுமுயற்சி தொடர்பாக ஆளும் கூட்டமைப்புக்குள் நல்லிணக்கை - ஏகோபித்த முடிவை - எட்ட ஜனாதிபதி முயல்வதுநல்லது.

# மாநகரசபைப் பிரிவில் வீதிகளை புனரமைக்க 'நிக்கொட்' நிதியுதவி

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள 7 வீதிகள் சுமார் 37 லட்சம் ரூபா செலவில் 'நிக்கொட்' உதவித்திட்டத்தின் கீழ புனரமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாநகரசபையினால் இந்த வீதிகள் திருத்தம் தொடர்பான திட்டம் யாழ். அரசாங்க அதிபரிடம் சமர்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

அரச அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட இந்த வீதித்திருத்த வேலைகளுக்கான நிதியை 'நிக்கொட்' நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

திருத்தப்படும் வீதிகளும் அவற்றிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியும் பற்றிய விவரம் வருமாறு:-

நாவலர் வீதி (பகுதி) 10 லட்சத்து 60 ஆயிரம் ரூபா, பெரிய தம்பிரான் வீதி 6 லட்சத்து 55 ஆயிரம், புருடி வீதி ,2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா, இராஜேஸ்வரி வீதி 6 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா, செல்லாத்தை வீட்டு ஒழுங்கை ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா, இராமநாதன் வீதி 4 லட்சத்து 45 ஆயிரம் ரூபா, மலர்மகள் வீதி 5 லட்சம் ரூபா.

இந்த வீதித் திருத்த வேலைகளை யாழ். மாநகரசபை உடனடியாக ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-173)

# வலி.மேற்கில் நடமாடும் சேவை விக்டோரியாவுக்கு இடம்மாற்றம்

## பிரதேசசபைச் செயலாளர் அறிவிப்பு

சங்கானை,செப்.28

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த வலிகாமம் மேற்கு பிரதேச செயலக நடமாடும் சேவை சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வறுத்தோலை, பள்ளசுட்டி, பாண்டவெட்டை, கல்விளான், வீரவத்தை, திக்கரை ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் உள்ளவர்கள் இறப்பு, பிறப்பு, திருமணம் போன்றவற்றின் நாள்பட்ட பதிவுகள், தேசிய அடையாள அட்டைகளுக்கான விணணப்பம் பெறல், வீடு அமைப்புக் கடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் சமூக நலத்திட்டப் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்குடன் இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகிறது எனவும் -

எனவே, சம்பந்தப்பட்ட மக்கள் இன்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்குச் சென்று மேற்படி சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (4-29-202)

# தங்கச்சங்கிலி உங்களுடையதா?

யாழ்ப்பாணம்,செப்.28

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை வளவினுள் தங்கத்திலான சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சங்கிலியினை தொலைத்தவர்கள் தமக்குரிய ஆதாரத்தினை விளக்கி பிரதேச சபைச் செயலாளரிடம் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கிலியினை பிரதேச சபை மண்டபத்தில் பட்டதாரி பயிலுநராகவுள்ள ஓர் அரச அலுவலர் கண்டெடுத்து வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-185)

# 'பண்பாட்டுக் கோலங்கள்' கண்காட்சியும் கலைவிழாவும்

சங்கானை,செப்.28

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும் 'பண்பாட்டுக் கோலங்கள்' கண்காட்சியும், வருடாந்த கலாசார விழாவும் எதிர்வரும் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளன.

மல்லாகம், தெல்லிப்பழை, கட்டுவன் வயாவிளான் மற்றும் மீளக்குடியமராத பிரதேசங்கள் இணைந்து நடத்தும் இவ்விழாவின் முதல்நாள் நிகழ்வுக்கு கலாசாரப் பேரவைத் தலைவர் வ.வைரவப்பிள்ளை தலைமை வகிப்பார்.

கலாசாரப் பேரவை உபதலைவர் சு.இராமலிங்கம் தலைமையில் இரண்டாம நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன், ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் ஆகியோர் கலந்துசிறப்பிப்பர். (4-29-202)

# தமிழக எழுத்தாளரின் நூலுக்கு கிளிநொச்சியில் அறிமுகவிழா!




தமிழ்நாட்டைச் சேர்ந்த இரா. நடராசன் எழுதிய 'ஆயிஷா' என்னும் நூலின் அறிமுக நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நூலை வெளியிட்டுவைப்பார்.

கருத்துரைகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், சேவைக்கால ஆசிரியர் செ.கணேசலிங்கம், உருத்திரபுரம் மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி மி.இதயசிவதாஸ் ஆகியோரும் நிறைவுரையை வெளிச்சம் ஆசிரியர் கருணாகரனும் நிகழ்துவார்கள். (4-202)

# சுயதொழில் உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை

சங்கானை,செப்.28

வலிகாமம் மேற்குப பிர்தேச செயலர் பிரிவில் மீன்பிடி, மேசன், மரவேலை போன்ற தொழில்களை மேற்கொள்பவர்களுக்கு சுய தொழில் உபகரணங்கள் 'மூவி மொண்டா' நிறுவனம் வழங்கவிருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகளை வலி.மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கும், இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இவ்வுதவிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-29-202)

# நாகர்கோயில் வித்தியாலயத்தை கற்கோவளத்துக்கு இடம்மாற்றுக!

## அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

செம்பியன்பற்று,செப்.28

புலோலி கிராமக் கோட்டடியில் இயங்கி வரும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தை கற்கோவளம் பகுதிக்கு இடம்மாற்றுமாறு மேற்படி வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வித்தியாலயத்தில் கல்விகற்கும் பெரும்பாலான மாணவர்கள் கற்கோவளம புனித நகர் பகுதியில் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் இருந்து 2 மைல் தூரத்திற்கு அப்பால் இப்பாடசாலை அமைந்துள்ளது.

இப்பகுதியில் போக்குவரத்து இல்லாமையால் மாணவர்கள்பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால், சில மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, இவ்வித்தியாலயத்தை மாணவர்களுக்கு ஏற்ற இடமாக அவர்களுக்கு மத்தியில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.(4-36)

# மழைகாலம் நெருங்குவதால் சுகாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு,செப்.28

மழைக்காலம் நெருங்குவதால் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டும் என வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் எஸ்.திருவாகரன் அறிவித்துள்ளார்.

அண்மையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் சுகாதார நடவடிக்கைகள் போதாது. வலிகாமம் தெற்கு பிரதேசசபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பல நிலுவையாக உள்ளன. மழைக்காலம் நெருங்குவதால் சுகாதார நடவடிக்கைகளில் நாம் கூடியகவனம் எடுக்கவேண்டும்.

எமது பிரதேச எல்லைக்குள் நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினைகளான கட்டாக்காலி நாய்கள், வடிகால்கள் சீரின்மை போன்றவை இன்னமும் சீர்செய்யப்படாமலும் உள்ளன. ஏனைய பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுவரும் சுகாதார நடவடிக்கைகள் போல எமது பகுதியிலும் அவற்றைத் துரிதப்படுத்த வேண்டும் என்றார்.

கட்டாக்காலி நாய்களை பிடித்து மலடாக்குவது தொடர்பாக அதற்கான மருந்துகள் கால்நடை வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தும் தைப்பதற்கான ஊசிநூல் வழங்கப்படாமையால் பணியை மேற்கொள்ள முடியாதிருப்பதாக கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் செல்வி ந.நிலானி தெரிவித்தார். (8-152)

# அநேக வசதியீனங்களுடன் அளவெட்டித் தபாலகம்!

வலிகாமம்தெற்கு,செப்.28

அளவெட்டி தபலாகம் அநேக வசதியீனங்களுடன் இயங்கி வருகிறது. தனியாருக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் இத்தபாலகம் இயங்கிவருகிறது.

இக்கட்டடம் மிகவும் பழைமை வாய்ந்ததாக இருப்பதால் மழைகாலத்தில் மழைநீர் கசிந்து உட்புகுந்து ஆவணங்களை நனைத்துவிடுகிறது என்று தபாலக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தபாலகப் பாவனைக்கென உள்ள சொந்தமான காணி துப்பரவு செய்யப் படாமையால் பற்றைகள், செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இக்காணியை துப்புரவுசெய்து தபாலகத்துக்கென பதிய கட்டடத்தை அமைதது தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-152)

## நாளை

புரட்டாதி 13
புதன்கிழமை
(29.09.2004)
திதி : பிரதமை
முன்னிரவு 7.02 வரை.
நட்சத்திரம் : ரேவதி
பின்னிரவு 5.18
சுபநேரம்: 4.32 - 5-02
ராகுகாலம்: 2.02 - 1.32
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

'முடியாது' என்பதை முடிந்தவரை அகற்றிவிடு; நீயே எதிர்காலத்தின் சிறந்த சாதனையாளன்.

# தியாகிகள், தலைவர்கள், வல்லுநர்களின் தோற்றமும் மறைவும் நிகழ்ந்த செப்ரெம்பர்

**செப்ரெம்பரின் சிறப்பு**

தியாகி திலீபன் மறைவுட்பட மறைமலையடிகள், வி.க, தனிநாயகம் அடிகள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., மெய்யியல் வல்லுநர் இராதாகிருஸ்ணன், கலைக்குரிசில் ஆனந்தக்குமாரசுவாமி, சி.வை.தாமோதரனார், மஹாகவி பாரதி, சேர்.பொன்.அருணாசலம், அறிஞர் அண்ணா, வன்னியசிங்கம், பெரியார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பண்டாரநாயக்க, கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, அரசர் அண்ணாமலைச் செட்டியார் ஆகியோரின் தோற்றமும் மறைவும் செப்ரெம்பர் மாதத்தில் நிகழ்ந்துள்ளது. இம்மாதத்தின் சிறப்பை ஒட்டி வரையப்பட்ட கட்டுரை இது.

ஆண்டின் ஒவ்வொரு திங்களுக்கும் (மாதம்) ஏதோ ஒரு சிறப்பு உண்டு. அதுபோல் செப்ரெம்பர் மாதமும் பல அறிஞர்களின் தோற்றத்தினாலும் மறைவினாலும் குறிப்பாகத் தமிழ் அறிஞர்களின் தோற்றமறைவினால் சிறப்பு எய்தியுள்ளது.

### தமிழால் உலகாண்ட தனிநாயகம் அடிகள்



அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் இன்று உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இனியும் நடைபெற இருக்கின்றன. 1964 இல் மலேஷியாவில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற, அதனால் உலகெங்கணும் வாழ்கின்ற மக்கள் தமிழரின் தொன்மையை, ஆழத்தை, அகலத்தை அறிய வாய்ப்பு ஏற்பட்டது. இம் மாநாட்டை அடுத்துத் தான் உலகெங்கணும் வாழ்கின்ற தமிழ் அறிஞர்கள் தமிழின் மேன்மையை உணர்ந்து தத்தம் நாடுகளில் தமிழைப்பற்றி ஆய்வுசெய்யத் தொடங்கினர்.

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவ வகைசெய்யவேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்கிய பெருமை தனிநாயகம் அடிகளுக்கு உண்டு. அதனால்தான் தமிழால் உலகாண்ட தனிநாயக அடிகளார் என்ற புகழ் அவரைத் தேடிவந்தது. ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு மேலாக Tamil Culture (தமிழ்ச் சால்பு) என்ற ஆங்கில காலாண்டிதழ் வெளிவர வழிகண்டவர் தனிநாயகம் அடிகளார். தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் செயற்படுவதற்கு அடிகோலிய பெருமை இவரையே சாரும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை. மாறாக திறமான புலமை எனில் அதனை உலகம் உவந்து ஏற்கவேண்டும்.

இன்று உலகம் தமிழையும் தமிழனையும் உவந்து போற்றுகிறது என்றால் அதற்குத் தகைசான்ந்து பணியாற்றியவர் தனிநாயகம் அடிகளே. அவர் எழுதிவெளியிட்ட "Nature in Ancient Tamil Poetry" (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை) என்ற நூல் அவருக்கு அழியாப் புகழைத் தந்துநிற்கிறது. அவர் வெளியிட்டுள்ள "தமிழ்த்தூது" தமிழுக்காக அவர் உலகெங்கும் தூதுசென்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருகிறது. இவர் மறைந்தது செப்ரெம்பர் முதலாம் நாளாகும். இவரைப் பற்றிய விரிந்த வரலாற்றை அறிய விரும்பின் 10 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் ஈழசுதந்திரனில் வெளிவந்த இக்கட்டுரையாளரின் தொடர் கட்டுரைகளை பார்க்கவும்.

### கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.



செப்ரெம்பர் 6 ஆம் திகதி கப்பலோட்டி - செக்கிழுத்த செம்மல் வ.உ.சியின் பிறந்தநாளாகும். உலகக் கடல்கள் அனைத்தையும் நாமே கட்டியாழ்வோம் என்று வீம்பும் வீரமும் பேசிய பிரித்தானியா பேரரசின் கொட்டத்தை அடக்கிய பெருமை அவரையே சாரும். (The Britian shall rule the seas) என்று பிரித்தானியா கொக்கரித்தபோது No the Tamils shall rule the seas என்று முழங்கியவர், நம் வ.உ.சி. சித்தாந்தத்தின் செம்மையை அறிந்ததோடு வேதாந்த விழுப்பொருளையும் உணர்ந்து நூலகள் வரைந்த பெருமையும் அவருக்கு உண்டு. பரிமேலழகர் உரையுடன் பெரிதும் மாறுபட்டு மனக்குடவர் உரையை வரவேற்றுத்தானே திருக்குறளுக்குப் புத்துரை வழங்கிய பெருமை அவருக்கு உண்டு. வாளேந்திய தமிழன் நூல் ஏந்துவதா என்றுகேட்டு காந்தியின் அறவழிப் போராட்டத்தை எதிர்த்து மறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டவர் வ.உ.சி.செக்கிழுத்த செம்மல் வ.உ.சியை பின்வருமாறு கவிமணி வாழ்த்துகிறார். இதோ அவர் பாடல்.

கப்பலை ஓட்டிக் கடுங்காவல் தண்டணையில்
உப்பில்லாக்கூழ் உண்டுடல் மெலிந்தோன்
ஒப்பில்லாச் செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை
அன்போடு சிந்தனை செய் நெஞ்சே தினம்.

### இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கிய இராதாகிருஸ்ணன்



இதே செப்ரெம்பர் 5 இல் இந்திய மெய்யியல் வல்லுநர், தலைசிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பேச்சாளர், என்பதோடு, இந்தியத் துணைக்கண்டத்தின் குடியரசுத் தலைவராக விளங்கிய பெருமையும் தத்துவ ஞானி இராதாகிருஸ்ணனையே சாரும். மெய்யியல்துறையில் இந்தியாவுக்குத் தனியிடத்தைப் பெற்றுத்தந்தவர் இராதாகிருஸ்ணன் அவர்களே.

### கலைக்குரிசில் ஆனந்தக்குமாரசுவாமி



செப்ரெம்பர் 9 கலைக் குரிசில் ஆனந்தகுமாரசாமி மறைந்தநாளாகும். புகழ் பூத்த சேர் முத்துக்குமாரசாமியின் ஒரே மகன் இவர். கலைத்துறையில் அவர் எழுதிக் குவித்த நூல்கள் எல்லையற்றவை. அவர் எழுதிய சிவநடனம் (The Cosmic dance of Shiv) என்ற நூல் தமிழன் மெய்யியல் துறையில் பெற்றிருந்த நுண் அறிவை உலகுக்கு எடுத்துக்காட்டுகிறது.

### பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி



செப்ரெம்பர் 11 பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி தம்பாட்டுத் திறத்தால் வையத்தை பாலித்தவன் மறைந்த நாளாகும். அவனின் பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு என்பன அவனுக்கு இவ்வுலகில் இறவாத புகழைத் தருவது உறுதி. அவனது செந்தமிழ் நாடு என்ற 40 வரிகொண்ட பாடலில் 15 இடங்களில் தமிழ் நாடு, தமிழ்நாடு என வலியுறுத்தியுள்ளான். நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை வடமாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு என்று தமிழ்நாட்டின் எல்லையை தெளிவாக வலியுறுத்தி மொழிவாழ, இனம்வாழ, நாடு வாழவேண்டும் என்ற அடிப்படை உண்மையை உலகுக்கு உணர்த்திய ஒப்பற்ற கவிஞன் பாரதி.

### தமிழீழம் தந்த தாமோதரனார்



"தமிழில் பதிப்புத்துறைக்கு அடித்தளம் இட்டவர் ஆறுமுகநாவலர். அதற்குச் சுவர் எழுப்பியவர் சி.வை.தாமோதரனார். கூரை வேய்ந்தவர் உ.வே.சுவாமிநாதஐயர்" என்று திரு.வி.க.மொழிந்தவை பொருள் பொதிந்ததாகும். இவர் கற்றோர் ஏற்கும் கலித்தொகை உட்பட 11 நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இவர் மறைந்தபோது பரிதிமாற் கலைஞர் உள்ளம் உருக பின்வருமாறு அவர் புகழ்பாடியுள்ளார்.

காமோதி வண்டுதேன் கடிமலர் கூட்டுதல் போல நா மோது செந்தமிழில் நன்னூல் பதிப்பித்த தாமோதரம்பிள்ளைச் சாலப்பெடுத்துச் சாற்றவெவர் தாமோதரமுடையார்.

### தமிழ்ப் பேரவை கண்ட சேர் பொன் அருணாசலம்



இலங்கை அரசியலில் தனக்கென தனிபிடம் பெற்று விளங்கியவர்கள் இரு உடன் பிறப்புக்கள். மூத்தவர் சேர் பொன் இராமநாதன் மற்றையவர் சேர் பொன் அருணாச்சலம். இவர் 1854 செப்ரெம்பர் 14இல் பிறந்தவர் ஆவார். இலங்கையின் அனைத்து இயக்கங்கள் ஆகிய அரசியல், சமூகம், தொழிற்சங்கம், பல்கலைக்கழகம் போன்ற அனைத்திற்கும் தோற்றுவாயாக இவர் விளங்கியதால் இவரை அனைத்தியக்கங்களின் தந்தையென வாழ்த்தப்படுகின்றார். இறுதியில் சிங்களவரால் ஏமாற்றப்பட்ட நிலையில் 1923 இல் இலங்கை தமிழர் பேரவையை உருவாக்கி தேசியம் என்ற போர்வையில் தமிழினம் பூண்டோடு அழிக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன் எனப் போர்க்கொடி எழுப்பியவர் சேர்.பொன் அருணாச்சலம் அவர்கள்.

### ஈழத்தமிழருக்காக ஓங்கி ஒலித்த அறிஞர் அண்ணா



"அண்ணாத்துரை என்னும் அண்ணல் தமிழ்நாட்டு வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் பண்ணாவான் சிறப்பன்.

"எழுத்தோவியத்தில் செவ்வரசு நாவாயின் அற்புதம் சூழ் மாலுமி என்று ஆடு" என தமிழத் தென்றல் திரு.வி.காவால் வாழ்த்தப் பெற்றவர் அண்ணா. அவர் தமிழ் நாட்டின் அழுக்கெடுப்பில் வண்ணானாகவும், தமிழக அரசாகிய நாவாயை - கப்பலை ஏற்ற முறையில் செழுத்திய மாலுமியாகவும் விளங்கியவர்.

ஈழத்தமிழர்கள் எப்போது இன்னல் உற்றபோதும் அவர்களுக்காக தனது "திராவிட நாட்டிலும்", Home land" இதழிலும் மாற்றாந்தாய் மனப்பாங்கோடு சிங்கள அரசு செயற்படுகிறது என்று கண்டனம் தெரிவித்து கட்டுரைகள் தீட்டியவர். மாநாடு கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியவர். ஐ.நா.மன்றத்துக்கும் அறிக்கைகள் அனுப்பியவர். ஐநா.மன்றத்தின் தீர்மானங்களுக்கு அமைய இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைகளை தடுக்க இந்தியா தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்றும் முழுங்கியவர். அவர் பிறந்தது செப்ரெம்பர் 15 ஆகும்.

### தமிழக மறுமலர்ச்சியின் தந்தை மறைமலை அடிகளார்



தென்னாடு பன்னெடுங் காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அவர் பேச்சு பல பேச்சாளர்களை படைத்தது. எழுத்து பல எழுத்தாளர்களை ஈன்றது. நூல் பல நூல் ஆசிரியர்களைத் தந்தது.

தென்னாடே அடிகள், அடிகளே தென்னாடு என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும் என்று தனித்தமிழ் இயக்கம் கண்ட மறைமலை அடிகளாரை தமிழ்த்தென்றல் திரு. வி.க.(மணவழகனார்) வாழ்த்துகிறார். பெருந்தகை மறைமலை அடிகள் மறைந்தது செப்ரெம்பர் 15 ஆகும். தமிழகத்தை அரண் செய்த இயற்கை மலைகள் இரண்டாகும். ஒன்று தென்குமரி மற்றது திருவேங்கடமாகும். தமிழகத்தில் தமிழுக்கு அரணாக விளங்கிய மானிட மலை மறைமலையாகும்.

### வாழ்வகத்தைக் காத்த வன்னியசிங்கம்



செப்ரெம்பர் 17-1959 இல் வாழ்வகத்தைக் காத்து வண்டமிழை வாழ்வித்த வன்னியசிங்கம் மறைந்த நாளாகும். 48ஆண்டுகளே வாழ்ந்த இவர் பன்னிரண்டு ஆண்டுகளே அரசியலில் ஈடுபட்டிருந்தபோதும் அவர் ஆற்றிய அளவற்ற பணியினால் அனைத்து தமிழ் உள்ளத்திலும் காலத்தை வென்று வாழ்கிறார்.

### தமிழ்த் தென்றல் திரு.வி.க.



பெண்ணின் பெருமை பேசி தொழிற்சங்கம் இயக்கம் கண்டு செய்தி இதழில் செந்தமிழ்ப் பெய்து பேச்சு ஒத்த எழுத்தையும் எழுத்தை ஒத்த பேச்சையும் நிகழ்த்தி தம் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஏற்ப தனிமனிதன் வாழ்விலும் பொது வாழ்விலும் ஒழுக்கத்தை உயிரென ஓம்பியவர் நம் திரு.வி.க. பல எழுத்தாளர்களிடம் காண முடியாத சிறப்பியல்புகள் இவரிடம் குடிகொண்டிருந்தது. எனவேதான் மாற்றாரும் இவரை மதித்துப் போற்றினர். அவர் மறைந்தது 1954 செப்ரெம்பர் 17 இல் ஆகும்.

### பகுத்தறிவுப் பகலவன் பெரியார்



அடிமையில் மூழ்கியிருந்த மக்களைத் தன் புரட்சிமிக்க சிந்தனையாலும் எழுத்தாலும், பேச்சாலும் ஆட்கொண்ட வரலாறுதான் பெரியாரின் வரலாறாகும். ஒரு நூற்றாண்டின் வரலாற்றை ஒரு மாத்திரையில் திரட்டி தந்தவர் பெரியார் எனறு அண்ணா வாழ்த்தியது பொருள் பொதிந்த கூற்றாகும்.

பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் முதல் பார்ப்பானை அடி என்று வெளிப்படையாக பார்ப்பனியத்தால் தமிழினத்துக்கு ஏற்பட்ட அழிவை சுட்டிக்காட்டி தமிழினத்தைக் காப்பாற்ற முயன்றவர். அறிஞர் அண்ணாவை விஞ்சுகின்ற அளவுக்கு ஆய்வுப் பொருளாக பெரியாா விளங்குவது முழுமையான படிப்பறிவு இல்லாத நிலையிலும் பகுத்தறிவுச் சிந்தனையை பரப்பியவர் பெரியார் என்பதை அறிவுலக வட்டாரங்கள் அவருக்கு கொடுத்த தனி மதிப்பில் இருந்து நாம் அறியத்தக்கதாக இருக்கிறது. இப்பெரியார் பிறந்தது செப்ரெம்பர் 17இல் என்பதை நாம் உணர்வோமாக.

### தமிழ் செங்குருதி கலந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன



தமிழ் நாட்டின் கீழைக் கரை தம்பி முதலியார் மரபில் வந்தவர் ஜே.ஆர்.ஜயவர்த்தன. முதலியார். ஜயவர்த்தன குடும்பத்தில் திருமணம் செய்து தன்னை சிங்களவராக இனம் காண விழைந்தார். தம்பி முதலியார் பூட்டன்தான் ஜே.ஆர். மதம் மாறியவர்கள் தம் குறைகளை மூடி மறைக்க வெறியனாக மாறுவது (Convert Becomes Fanatic) வழமை என்பதற்கு அமைய முதலில் தமிழ் இரத்தக் கலப்புடைய கிறிஸ்தவனாக விளங்கிய ஜே.ஆர். பின் புத்த மதத்துக்கு மாறி சிங்கள பெளத்த வெறியனாக மாறி தனது 80 அகவையை தாண்டிய நிலையில் தன் வாழ்வை முடித்துக்கொண்டார். சிங்களமும் தமிழும் இந்நாட்டின் ஆட்சி மொழிகளாக விளங்கவேண்டுமென்று பண்டாரநாயக்கா முழங்கிய காலத்திலேயே சிங்களம் மட்டுமே ஆட்சி மொழிகளாக விளங்க வேண்டும் என்று இலங்கை சட்டமன்றத்தில் வெறியோடு தீர்மானம் கொண்டு வந்தவர் ஜே.ஆர்.

இவர் சிங்களவர்களுக்காக இவ்வளவு தூரம் பாடுபட்டும் இவரைக் கிழட்டுக் குள்ளநரி (Old Cunning fox) என்று சிங்களவர்கள் மதிப்பீடு செய்ததினால் சிங்கள மக்களிடையே இவருக்கு செல்வாக்கு இருக்கவில்லை. அத்தோடு, தமிழ்மக்களின் மாறாத பகையை நிலையாகத் தேடிக்கொண்டவர் ஜே.ஆர். இவர் பிறந்தது செப்ரெம்பர் 17ஆகும்.

### சிங்கள மக்களின் சிந்தையில் இடம்பெற்ற பண்டாரநாயக்கா



செப்ரெம்பர் 26-1959 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தாம் வளர்த்தகடா தன்மீது பாய்ந்ததுக்கு அமைய தாம் வெறியூட்டி வளர்த்த புத்த குரு பீடத்தால் சாகடிக்கப்படுகிறார். அவரைப் பற்றிய தமிழர் மதிப்பீடு, கருத்து மோதலுக்கு உரியது. ஆனால், சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர் அவர்களுக்குப் பெரும் தலைவர் என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. ஆனால், வியக்கத்தக்க நிகழ்ச்சியாதெனில், செப்ரெம்பர் 26இல் தம் இல்லத்திலேயே வெறிகொண்ட புத்தகுருவினால் சாக

ம.கா.ஈழவேந்தன்

டிக்கப்படுவதற்கு முன்பு நாடாளுமன்றத்தில் செப்ரெம்பர் 24இல் அவர் நிகழ்த்திய இறுதி உரை மறைந்தும் மறையாத எம் வன்னியசிங்கத்தின் புகழ்பாடும் முறையிலேயே அமைந்திருந்தது.

திரு. பண்டாரநாயக்காவும், நீலபெருமாள் என்ற தமிழர் மரபில் வந்தவர் என்பது மறைந்த ஆய்வாளர் திரு.ஜேம்ஸ்.ரி.இரத்தினம் அவர்களின் கருத்தாகும்.

### கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை



உள்ளத்து உள்ளது கவிதை இன்பம் உருவெடுப்பது கவிதை தெள்ளத் தெளிந்த தமிழில் தெரிந்து உரைப்பது கவிதை என்று கவிதைக்கு இலக்கணம் தந்தவர் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. அவர் மறைந்தது செப்ரெம்பர் 26 ஆகும். அவரின் மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமார் கயாம் பாடல்கள் அவர் படைத்த நூல்களில் சிறந்தவையாகக் கொள்ளப்படுகின்றன. அவர் நம் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் போல் இயற்கை கவிஞராகவும் குழந்தைக் கவிஞராகவும் விளங்கினார். ஆசிய ஜோதியும் உமார் கயாம் பாடல்களும் தழுவல் கவிதைகளாய் இருந்தபோதும் தமிழில் எழுந்த மூலக் கவிதைகளாகவே காட்சியளிக்கின்றன.

### எம் நெஞ்சில் நிறைந்த தியாகி திலீபன்



தொடர்ச்சியாக சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் அறவழிப் போராட்டத்தைக் கைவிட்டு மறவழிப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து உலகம் வியக்கின்ற போராட்ட நுணுக்கங்களோடு வெற்றிகண்டு வருபவர்கள் தான் விடுதலைப் புலிகள். அவர்களுக்கு மறவழிப் போராட்டமும் தெரியும் அண்ணல் காந்தியை மிஞ்சுகின்ற அளவுக்கு அறவழிப் போராட்டத்தையும் நடத்த முடியும் என்பதை தம் இயக்க பெரும் தலைவர், தியாகி திலீபன் ஊடாக உணர்த்திச் சென்றுள்ளனர். அயர்லாந்திலும் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த வரலாறு உண்டு. காந்தி உயிர் விடும் உண்ணா நோன்பை நோற்ற போதும் கூட தண்ணீருடன் உப்பைக் கலந்தே உண்ணா நோன்பை மேற்கொண்டார். ஆனால், நம் திலீபனோ உப்புக்கலந்த நீரையோ அல்லது உப்பில்லா நீரையோ கூட அருந்த மறுத்து 12 நாள்கள் கடும் தவம் இருந்து உலகத்தை வியப்பில் ஆழ்த்தி காந்தியை தந்த இந்திய துணைக் கண்டத்தையே வெட்கித் தலை குனிய வைத்து தமிழ் கூறும் நல் உலகம் ஐய்யோ! என்று அலற உடல் தம் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று செப்ரெம்பர் 26-1987 இல் உலகம் முழுவதும் அவரை மறக்கமுடி

(11ஆம் பக்கம் பார்க்க)

# உலக குடியிருப்பாளர் தினத்தை கொண்டாட விரிவான ஏற்பாடுகள்

தென்மராட்சி,செப்.28

உலகக் குடியிருப்பாளர் தினத்தை உள ளூராட்சி மன்றங்களால் சிறப்புறக் கொண்டாட மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் ஏற் பாடுகளை மேற்கொண்டுள்ளது:

ஒக்ரோபர் மாதம் 4ஆம்திகதி நடை பெறவுள்ள உலகக் குடியிருப்பாளர் தினத்தை கிராமிய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத் தும் வகையில் அனுஷ்டிக்குமாறும் கிராமிய அபிவிருத்தியின் உந்துசக்தியே நகரமாகும் என்னும் கருத்தினை உள்ளடக்கும் தொங்கு பதாகைகளை மக்கள் கூடும் இடங்களில் காட்சிப படுத்துமாறும் மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் தெ.து.விஜயலட்சுமி சகல உள்ளூ ராட்சிச் சபைச் செயலாளர்களுக்கும் அறி வித்துள்ளார். (8-117)

# தெங்குச் செய்கைச் சபையினால் தென்னம்பிள்ளை விநியோகம்

வடமராட்சி,செப்.28

தெங்கு பயிர்ச்செய்கைச் சபையின் அச்சு வேலித் தென்னை நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்பட்ட 35 ஆயிரம் நல்லினத் தென்னம் பிள்ளைகள் தென்னைத் தோட்டக்காரர்களுக் கும், வீடுகள் தோறும் தென்னை நடுவோருக் கும் வழங்கப்படவுள்ளன.

இப்பெரும் போகத்தில் தென்னைச் செய்கையில் ஆர்வம் உள்ளோர் தமக்குத் தேவையான நல்லினத் தென்னம்பிள்ளை களை யாழ்ப்பாணம், 595/10, நாவலர் வீதியில் உள்ள தெங்குப்பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய அலுவலகத்தில் பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம் எனப் பிராந்திய முகாமை யாளர் சி.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த நல்லினத் தென்னம்பிள்ளைகள் 40ரூபா, 25ரூபா வீதம் மானிய விலையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-173)

### பனிப்புலம் வீதி திருத்த வேலை ஆரம்பம்

சுழிபுரம்,செப்.28

பண்ணாகம், மெய்கண்டான் வித்தியால யத்திற்கு அருகிலுள்ள பனிப்புலம் கிராமத திற்குச் செல்லும் வீதி திருத்தத்திற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பாரிய கிடங்குகளுடன் காணப்படும் இந்த வீதியில் மழைகாலங்களில் பயணிபபது மிகவும் சிரமமானது. எனவே, இந்த வீதி திருத்த வேலை யானது மிகவும் அத்தியாவசியமானதாகச் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (4-28)

# இந்தியாவில் இருந்து ஈழத் தமிழ் அகதிகள் திரும்பும் அளவுக்கு நிலைமை சீரில்லை

சென்னை,செப்.28

இந்தியாவில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் சொந்த நாட்டுக்கு திரும்புவதற்கான நிலைமை இன்னும் உருவாகவில்லை என்று ஐ.நா.தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் இந்தியாவுக்கானதூதுவர் லெனார்ட் கொட்ஸாலைனின் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

"அங்கு (இலங்கையில்) நிலைமைகள் சீரானால் பெரும்பாலான அகதிகள் தமது சொந்த நாடு திரும்பவேண்டும் என்று கோரு வார்கள் என்று நினைக்கின்றேன். இப்போது ஒரு சிறு தொகையினரே அப்படிக் கோருகின் றனர்"- என்றார் தூதுவர் லெனார்ட் கொட் ஸாலைனின்.

சென்னைப் பல்கலைக்கழக பாதுகாப்பு மற்றும் புள்ளிவிபரவியல் பீடம் ஒழுங்கு செய் திருந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது இலங்கைக்குத் திரும்பிச் சென்ற 12ஆயிரம் அகதிகளுக்கு இலங்கை அரசு உதவிகளை வழங்குகின்றது என்று சொல்லப் படுகின்றது. ஆனாலும், இந்தியாவில் இருந்து அகதிகள் திரும்பிச் செல்லும் அளவுக்கு அங்கு நிலைமை சீரடையவில்லை - என்றும் அவர் கூறினார்.

1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தி யாவில் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் இலங்கை அகதிகள் தஞ்சமடைந்துள ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

### சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு புதிய கட்டடங்கள்

தென்மராட்சி,செப்.28

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைககுப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கென சுவிஸ் நிறுவனம் ஒன்று நிதி உதவி வழங்கவுள்ளது.

தற்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரிக் கட்டடத்தில் இயங்கும் இந்து ஆரம்ப பாட சாலைக்கு வெளிநாட்டு மக்களின் உதவியு டன் பத்து லட்சம் ரூபா செலவில் புதிய காணி அண்மையில் கொள்வனவு செய்யபபட்டுள்ளது.

இக் காணியைப் பார்வையிட்ட சுவிஸ் நிறுவனம் கட்டடங்களை அமைக்க நிதி உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (4-117)

# உடற்கல்வி டிப்ளோமா பட்டம்பெற்றோரை பட்டதாரி வேலைவாய்ப்பில் உள்வாங்கமுடியாது

## யாழ். அ[illegible]ச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,[illegible]ப்.28

உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற வர்களை பட்டதாரி வேலைவாய்ப்புத் திட் டத்தில் உள்வாங்கமுடியாது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கூறி யுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட உடற்கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யாழ். அரசஅதிபர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த வாரம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். அரச அதிபர் செ.பத்ம நாதன் தெரிவித்ததாவது:-

3வருடம், 4வருடம், பட்டக் கற்கைநெறி முடித்தவர்களுக்கே அரசதுறை வேலை வாய்ப்பில் இடமுண்டு.

இதற்கான சுற்றுநிருபங்களும் அரச துறையினரால் வெளியிடப்பட்டுள்ளன.

2 வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியை 3 வருட பட்டக் கற்கைநெறியாக மாற்றவேண்டும்.

அவ்வாறு மேற்கொள்ளுவதற்கேற்ற ஒழுங்கு களை அரச அதிபர் என்றவகையில் யாழ். பல் கலைக்கழக துணைவேந்தருக்கும், மானியங் கள் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்க முடியும் என்றார்.

இதேவேளை - அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப் பினர்களும் உடற்கல்வி டிப்ளோமாப் பட டம் பெற்ற பட்டதாரிகளின் கற்கைநெறியை 3 வருட பட்டக்கற்கை நெறியாக மாற்றுவதற்கு ஏற்ப சகல ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதி யளித்துள்ளனர்.

இதுவரை 4அணிகளை சேர்ந்த 175 மாணவர்கள் உடற்கல்வி துறையில் டிப்ளோ மாப் பட்டம் பெற்று வெளியேறியுள்ளமை குறிப பிடத்தக்கது. (8-185)

### கிராமிய வங்கிகளுக்கு தளபாடம் அன்பளிப்பு

'நிக்கொட்' நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமிய வங்கிகளுககு தளபாடம் வழங்கும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி பி.ப. 3 மணியளவில் கரைச்சி வடககு ப.நோ.கூ.சங்க இரணைமடு அரிசியாலையில் இடம்பெற்றுள்ளது.

கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச.தலைவர் மா.நடராசா தலைமையில் ஆரம்பமான இந நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொணடார். கிளி.மாவட்ட 'நிக்கொட்' நிறுவனத்திட்டமிடல் பணிப்பாளர் சி.பார்த்திபன், கிளி.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலக தலைமைப் பரிசோதகர் க.சின்னராசா ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகக் கலந்துகொண்டனர். பல நோ.கூ. சங்கங்களைச் சேர்ந்த பணிப்பாளர்கள், பணியா ளர்கள் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த பரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப் பித்தனர்.

நிக்கொட் நிறுவனத்தின் உதவியினால் கிளி.மாவட்டதிலுள்ள ஆறு ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலா ஒரு லட்சத்து முப்பத் தேழாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டன. (4-305)

# வாசகர் திருமுகம்

## விரைந்து செல்லும் வாகனங்களும் இரந்து நிற்கும் குளப்பிட்டியும்

வாகனங்களும் வீதிகளும் மக்களுக்காகவே உருவாக்கப்பட்டவை. மாறாக மக்களை நோதல்படுத்துவதற்காக அமையுமாயின் தர்மமாகாது. குளப்பிட்டிச் சந்தி, உண்மையிலேயே மிகவும் ஒடுக்கமான இடக்குமுடக்கான முச்சந்தியாகும். கண் கடை தெரியாதபடி வாகனங்கள் மக்களை வேட்டையாடுமாப்போல ஓடுவதைப் பார்க்கும்பொழுது, மக்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களாக இருந்தால் மக்கள் பாக்கியவான்களாவார்கள். யார் செய்வது? யாருக்குச் சொல்லுவது? இறைவன்தான் துணை. மனிதநேயம் மிக்கவர்கள் தயவுகூர்ந்து ஆவனபுரிவீர்களாக!

ஒரு பாதசாரி.

✻ ✻ ✻

## வெளிநாட்டு ஒளிபரப்புக்களை இங்கு அனுமதிக்கலாமா?

சில தினங்களுக்கு முன்னர் 'உதயன்' பத்திரிகையில் கொழும்பில் வெளிநாட்டு ஒளிபரப்பை சட்டவிரோதமாகக் கேபிள்மூலம் ஒளிபரப்புச் செய்தவர்கள் கைதாகிய செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால், யாழ்.குடாநாட்டில் தற்போது பரவலாக வெளிநாட்டு ஒளிபரப்பை கேபிள மூலம் வழங்குபவர்கள் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏன் இந்தப் பார பட்சம்? சட்டத்தை நிலைநிறுத்துவோர் தமிழ் சமுதாயம் சீரழியட்டும் என்று இருக்கின்றார்களா? சட்டப் பாதுகாவலர்கள் இதுதொடர்பாக நடவடிக்கை எடுத்து இளம் சந்ததியைக் காப்பாற்றவேண்டும். உதயனில் பல தடவை 'சன் ரீ.வி.' கேபிள் மூலம் வழங்குவது பற்றி எதிர்ப்பும் ஆதரவும் தெரிவித்தனர். 19.08.2004 இல் வந்த சத்தமும் சந்தடியும் பகுதியிலும் 'சினிமா' பற்றிய ஆதங்கம் வெளிப்பட்டுள்ளது. 'சன் ரீ.வி.' தீயது என்று நான் வாதாடவில்லை. அதில் வரும் நிகழ்ச்சிகளில் தொடர்பகுதிகளைப் பார்க்கும் மாணவர்கள் இன்று என்ன நடக்கும் என்ற சிந்தனையுடனேயே பாடசாலை செல்கின்றர்கள். இதனால், அவர்களால் திறமையாகக் கற்கமுடிவதில்லை. இந்தத் தொடர்கள் மாணவர்களின் நேரத்தையும் ஆற்ற லையும் பயன்படுத்த முடியாதபடி வீணாக்கும் ஒரு நோய்.

திரைப்படக் கூட்டுறவுச் சங்கம் வெளியிடும் படங்களையும் தேவையற்ற காட்சிகளைத் தணிக்கை செய்துவெளியிட்டால் உறவுகளுடன் ஒன்றாக அமர்ந்து பார்க்கலாம். இது நன்மையும் பயக்கும்.

*மானிப்பாய்* சுதர்சன்

✻ ✻ ✻

## எங்கள் நிலை என்ன?

வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஒரு விமோசனம் கிடைக்கிறது. சந்தோசப்பட வேண்டிய விடயம். ஏற்கனவே அரச சேவையில் இருப்பதால் பட்டதாரி நியமனத்திலிருந்து தற் போது விலக்கப்பட்ட, எம்மைப் போன்ற கீழுழைப்புப் பட்டதாரிகளின் நிலைஎன்ன? பல பட்டதாரிகள், க.பொ.த.சாதாரண அல்லது உயர்தரத்தை அடிப்படைத் தகைமையாகக் கொண்டு, ஆள் சேர்க்கப்பட்ட நியமனத்தில், குறைந்தளவு வேதனத்தைப் பெற்றுக் கடமையாற்று கிறார்கள். அவர்களுக்குப் பட்டதாரி நியமனம் தற்போது ஏன் விலக்கப்பட்டுள்ளது.

பட்டதாரி நியமனத்திற்கு ஆள்சேர்ப்பதற்காகக் கோரப்பட்ட விண்ணப்பத்தில், ஏற்கனவே, அரச சேவையில் இருப்பின் அதுபற்றிய விவரம் கேட்கப்பட்டது. ஏற்கனவே, அரச சேவையிலிருக்கும் பலருக்கும், அது பற்றிக் குறிப்பிடாத காரணத்தால் பட்டதாரி நியமனம் கிடைத்துள்ளது. ஆனால், தாம் அரசசேவையில் உள்ளதாக உண்மை கூறிய காரணத்தால், பலர் விலக்கப்பட்டுள்ளனர். எமக்கான தகுதியான வேலை எப்போது கிடைக்கப்போகிறது? தொடர்ந்தும் நாம் க.பொ.த. சாதாரண அல்லது உயர்தர நியமனத்தில் குறைந்த வேத னத்தைப் பெற்றுக் கொண்டு கீழுழைப்புப் பட்டதாரிகளாகவே வேதனைப்பட வேண்டி யதுதானா? பட்டதாரி நியமனத்தைப் புதிதாகக் கொடுக்காவிட்டாலும், நாம் தற்போதிருக்கும் சேவையிலிருந்தே எம்மைப் பட்டதாரி நியமனத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யலாமல்லவா? ஏன் எமதுநிலை அதிகாரிகளின் கண்களில் படவில்லை? படிக்கும் காலத்திலும் கஷ்டப்பட்டோம். வேலை தேடும் போதும் கஷ்டப்பட்டோம். தொடர்ந்தும் இதே நிலையா? கல்வி அதிகாரிகளே நாமும் பட்டதாரிகள்தான். எம்மையும் கவனத்தில் எடுங்கள் தயவுசெய்து.

*யாழ்ப்பாணம்.* பாதிக்கப்பட்ட கீழுழைப்புப்பட்டதாரிகள்.

✻ ✻ ✻

## ஓய்வு கேட்கும் மகாமண்டபம்

கும்பகோணத்தில் குழந்தைகளுக்கு ஏற்பட்ட கொடூரம்! யாழ்ப்பாணம் சமுர்த்தி அலு வலகச் சிமெந்துக்கூரை சரிந்த பரிதாபம்! கட்டுப்பாடற்ற வாகன சவாரியால் ஏறபடும் மரண ஓலங்கள்! யாவுமே "அவதானமாகச் செயற்படுங்கள்" என்ற வாசகத்தை யாவர்க்கும் எடுத்தியம்புகிறது.

இந்நிலையில், ஆயிரமாயிரம் அறிஞர்களை உருவாக்கிய பெருமையோடு, வானுயர்ந்து நிற்கும் மாட்சி ஸ்கந்தவரோதயக் கல்லூரி பிரதான மண்டபத்திற்குரியதாகும். 1894 ஆம் ஆண்டிலே கந்தையவள்ளளின் சிந்தனையால் உருப்பெற்ற இம்மகாமண்டபம் நூற்றிப் பத்து (110) ஆண்டுகள் பழமைவாய்ந்த பேறுடையதாகும். இந்த மண்படத்திலே ஐந்து வகுப்புக்கள் மொத்தமாக இருநூறு மாணவர்களும், கூட்டங்கள், பிரார்த்தனைகளின் போது ஆயிரத்திற்கும் அதிகமானவர்களும கலவிச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார்கள். பாரிய சுவர்ப்பீடங்களையுடைய மண்டபமோ தளர்வுற்றும், அசைவுற்றும் காணப்படுகின்றது. மாண வர்கள் அண்ணாந்து ஏக்கமுறும் காட்சி என்னை ஒருகணம் பயம்கொள்ள வைத்துவிட்டது! எழுத வேணடிய தேவையை மேற்படி நிகழ்வுகளே ஏற்படுத்திவிட்டன. இறைவா! இனியும் நீ மௌனமாக இருந்து விடாதே!

'நலன்விரும்பி' என்ற வகையில் நான் எழுதுவது யாரையும் புண்படுத்தாது என்பது எனது நம்பிக்கையாகும். அவசிய, அவசர நடவடிக்கையாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

அ) புதிய மாடிக் கட்டடம் அமைவதற்கு வழிசமைத்தல்

ஆ) மாணவச் செல்வங்களின் பெறுமதி கருதி, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பாடசாலைச் சமூகம் காலம் தாழ்த்தாது சம்பந்தப்பட்ட அனைவருடனும் ஆக்கபூர்வமாகத் தொடர்பு கொள்ளுதல்.

இ) நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக புதிய மாடிக்கட்டடத்தின் அவசிய தேவையை வலியுறுத்துதல். நிதி ஒதுக்கீடு செய்தல்.

ஈ) மாணவர்களுக்கும். பெற்றோர்களுக்கும் பாதுகாப்பான ஆரோக்கியமான நம்பிக்கையை ஏற்படுத்துதல் - கல்விப்புலம் சார்ந்த அனைவரினதும் பொறுப்பாகும்.

மேற்போந்த விடயங்கள் கவனிக்கப்படுமாயின் மாணவர்களும், ஆசிரியர்களும் பாக்கியவான்களே! கருணை காட்டுங்கள். இல்லையெனில் .......!

"நலன்விரும்பி"

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை - 2004

## மாதிரி வினாத்தாள்

## தமிழ்மொழியும் இலக்கியமும் I

22 T I

நேரம் : 1 மணித்தியாலம்

ஆசிரியர் : க.ஈஸ்வரன்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
**1-40வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து உமக்கெனத் தரப்பட்டுள்ள விடைத்தாளில் புள்ளடி (X) இடுக.**

**★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) மக்கள் பலவகையினர். அவர்களுள் ஈரநெஞ்சினரும் உளர். தீர நெஞ்சினரும் உளர். இதில் **தீர** என்பதன் கருத்து யாது?
(1) இரக்கம் (2) பொறை (3) வீரம் (4) சாந்தம்

02) "பெரியவர் கேண்மை பிறைபோல......" இதில் **கேண்மை** என்பதன் ஒத்த பொருட் சொல்லாக அமைவது?
(1) உறவு (2) தூரம் (3) பகை (4) கேட்டல்

03) "வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திரு மடந்தை மங்கல நாண் காண வருவான்..." என்பதில் வந்த **மங்கலம்** என்பதன் எதிர்பொருட் சொல்லாக அமைவது.
(1) அமங்களம் (2) அவமங்கலம் (3) அமங்கலம் (4) சுபமங்கலம்

04) "மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும் தன்வாயாற் கெடும்...." இதில் **நுணல்** எனப்பட்டது யாது?
(1) நாணல் (2) அறிவிலி (3) பேதை (4) தவளை

05) மோட்டார் கார் (Motor Car) என்பதன் தமிழ்மொழி வடிவம்
(1) புகையிரதம் (2) உந்தூர்தி (3) பேருந்து (4) நாற்சக்கரவண்டி

**★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்ப மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

06) ஒரு நூலில் அதன் ஆசிரியரின்றி பிறரால் எழுதிச் சேர்க்கப்படுவது ________ ஆகும்.
(1) அணிந்துரை (2) புனைந்துரை (3) இடைச்செருகல் (4) முகவுரை

07) 2004இல் நடந்த யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ________ பட்டங்களை வழங்கிக் கௌரவித்தார்.
(1) வேந்தர் (2) துணைவேந்தர் (3) அதிபர் (4) முகாமையாளர்

08) நோயாளிக்குச் ____________ நல்லதொரு பானமாகும்.
(1) செவ்விளனி (2) செவ்விளநீர் (3) செவ்விளனீர் (4) செவ் இளனி

09) பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட __________ ஏற்றுக்கொள்ளப்பட்டது
(1) பிரேரனை (2) பிறேரணை (3) பிறேரனை (4) பிரேரணை

10) "வசந்தம் இசையகம்" என்ற பெயரில் புதிய இசைமன்றம் ஒன்று அண்மையில் __________செய்யப்பட்டது
(1) அங்குராப்பணம் (2) அங்குரார்ப்பணம்
(3) அங்குராற்பணம் (4) அங்குராட்பணம்

**★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

11) ஒன்று போலிருக்கும் வேறொன்று எவ்வாறு அழைக்கப்படும்.
(1) மந்திரம் (2) மரபு (3) போலி (4) மஞ்சரி

12) தாய், தந்தை, குரு, தமயன், அரசன் இவர்களைச் சுட்டும் ஒரு சொல்?
(1) ஐங்குரவர் (2) பஞ்சபாண்டவர்
(3) ஐம்பெரியார் (4) ஐந்நபர்

13) கலை, கேள்வி, வித்தை என்ற பலமொழிகள் தரும் ஒருமொழி எது.
(1) வினா (2) கல்வி (3) போர் (4) அம்பு

14) ஒரு நூலுக்கு நூலாசிரியர் வழங்குவது
(1) நூன்முகம் (2) பின்னிணைப்பு (3) அணிந்துரை (4) வெளியீட்டுரை

15) பனையின் இளம்பிஞ்சு நுங்கு என்பது போல வாழையின் இளம்பிஞ்சு
(1) வடு (2) மூசு (3) கச்சல் (4) குரும்பை

**★ பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

16) 'வேதனை மிருதல்' என்ற பொருளில் வரும் இலக்கணத் தொடர் பின்வருவனவற்றுள் எது?
(1) எடுத்தெறிதல் (2) கருவறுத்தல் (3) ஈரல்கருகுதல் (4) ஒடெடுத்தல்

17) பின்வருவனவற்றுள் இணைமொழியாவது எது?
(1) விதிர்விதிர் (2) ஒட்டுறவு (3) மெல்ல மெல்ல (4) குபீர்குபீர்

18) சிறிய தீமைகளையும் தவிர்த்துவிடவேண்டும் என்ற பொருளில் வரும் பழமொழி
1) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
2) கெடுவான் கேடு நினைப்பான்
3) சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி
4) சிறுதுளி பெருவெள்ளம்

19) பதம் பார்த்தல் என்ற மரபுத்தொடரின் பொருள் யாது?
(1) மதிப்பிடுதல் (2) பரிசீலித்தல் (3) உறுதிதருதல் (4) இரங்குதல்

(20) பேராளர் என்பதன் பொருளாக அமைவது
(1) பேராசிரியர் (2) தலைமை ஆசிரியர் (3) தலைவர் (4)பிரதிநிதி

**★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) உயிரளபெடைக்கு மாத்திரை எத்தனை?
(1) அரை (2) ஒன்று (3) இரண்டு (4) மூன்று

22) பின்வருவனவற்றுள் நெடிற்றொடர் குற்றியலுகரமாக அமைவது?
(1) ஆறு (2) பயறு (3) சாப்பாடு (4) வயிறு

23) பின்வருவனவற்றுள் உயிர் மெய் குறிலாக அமைவது
(1) கா.சீ.ணீ (2) சி. னு. ந (3) நா,ஐ,கீ (4) ஆ,ஈ,ஊ

24) பிரான்ஸிய மொழிச்சொல் மட்டும் கொண்ட தொகுதி எது
(1) தோம்பு, துட்டு (2) பட்டாளம், குசினி
(3) வைரசு, பேப்பர் (4) ஏலம், அன்னாசி

25) பின்வருவனவற்றுள் விரவுத் திணையாவது யாது?
(1) தாய் (2) ஜனாதிபதி (3) கிளி (4) கண்ணன்

26) தோழா கேள் என்பது எத்தனையாம் வேற்றுமை.
(1) நான்காம் வேற்றுமை (2) ஏழாம் வேற்றுமை
(3) எட்டாம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

27) பின்வருவனவற்றில் பால் பகாவ..்றிணையாவது?
(1) கூவின பூங்குயில் (2) மாடுகள் மேய்ந்தன
(3) கண்ணன் பாடினான் (4) கிளி கத்தியது

28) 'கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்' என்பதில் கைத்தலம் என்பது.
(1) உவமையணி (2) உருவக அணி (3) சிலேடை (4) தற்குறிப்பேற்றம்

29) மெய்கள் ஈரொற்றாய் மயங்கிய சொல் எது?
(1) செய்தான் (2) பார்த்தான் (3) குளித்தான் (4) நடந்தான்

30) "நன்றே செய்க" என்பது எவ்வகை வாக்கியம்.
(1) செப்பு (2) விருப்பு (3) வியப்பு (4) ஏவல்

**★ பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவு செய்க.**

31) எனது பிள்ளைகள்
(1) இவர்களல்லர் (2) இதுகளல்ல (3) இவையல்ல (4) இவர்களல்ல

32) நீ கவனமாக படித்தாலன்றி
(1) பரீட்சையில் சித்தியடைவாய் (2) பரீட்சையில் சித்தியடைகிறாய்
(3) பரீட்சையில் சித்தியடையமாட்டாய் (4) பரீட்சையில் சித்தியடையவில்லை

33) இக்காரியத்தைச்
(1) செய்தவன் அவனா? அவளா? (2) செய்தவர் அவனா? அவளா?
(3) செய்தவள் அவனா? அவளா? (4) செய்தவை அவனா? அவளா?

34) மிகுந்த மகிழ்ச்சி கொண்ட அவள் மனம்
(1) சலசலப்பு அடைந்தது (2) கணகணப்பு அடைந்தது
(3) கிளுகிளுப்பு அடைந்தது (4) பதைபதைப்பு அடைந்தது

35) நீ எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்பினும் நான் இதற்கு ஒருபோதும்
(1) இணங்குவேன் (2) இணங்கேன்
(3) இணங்கினேன் (4) இணங்கவில்லை

**★ பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மீனினம் ஓடி பரக்குதம்மா ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானும் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா!

முல்லை மலர் பந்தல் இட்டனரோ - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ
வெல்லு மதியின் திருமணமோ? அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ.

36) இப்பாடல்களின் மையக் கருத்தாக அமைவது
(1) சூரியனைக் காணுதல் (2) சந்திரனைக் காணுதல்
(3) மழைபொழியும் காட்சி (4) பூஞ்சோலையின் அழகு

37) மீனினம் என்று கூறப்பட்டவை யாவை?
(1) மீன்களின் கூட்டம் (2) கண்கள் (3) நட்சத்திரங்கள் (4) பெண்கள்

38) மாட்சி, விதானம் என்பவற்றின் கருத்துக்களைத் தருக
(1) அழகு, வீடு (2) அழகு, கூரை
(3) அழகு, மாளிகை (4) அழகு, அரண்மனை

39) இதில் பயின்று வரும் அணி யாது?
(1) தற்குறிப்பேற்றம் (2) உவமை (3) உருவகம் (4) உயர்வு நவிற்சி

**★ ஒழுங்கின்றிக் கிடக்கும் வாக்கியங்களை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும் அதற்கான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) உலக வரலாறு, மானிடவியல், தத்துவம், விஞ்ஞானம், புராதன மொழிகள் முதலியவற்றையும் இடைவிடாது படித்து வந்திருக்கிறார்.
ஆ) தமிழ்க் காதல், அடிகளாரை ஆட்கொண்டிருந்தபொழுதும் அது அளவாகவே இருந்தது; காதல் வெறியாக மாறவில்லை.
இ) ஆங்கில இலக்கியத்தை மட்டும் கற்பதோடு அமைந்தவர் அல்லர் அடிகளார்.
ஈ) இவற்றின் விளைவாகவே பரந்த உளப்பாங்கு அவரிடத்தே வளர்வதாயிற்று.
உ) பாரதியாரை அடிகளார் போற்றியதற்கு இத்தகைய மன ஒற்றுமையும் காரணமாய் இருந்திருக்கலாம்.

40) (1) உ, ஈ, இ, அ, ஆ (2) அ, ஆ, ஈ, உ, இ
(3) ஈ, உ, அ, இ, ஆ (4) இ, அ, ஈ, ஆ, உ

*(40 புள்ளிகள்)*

# தமிழ்மொழியும் இலக்கியமும் II

## நேரம் : 3 மணித்தியாலம்

22 T II

**01) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250சொற்களில் அமையு மாறு எழுதுக.**

அ) எயிட்ஸ் ஓர் ஆட்கொல்லி நோய் இலங்கையில் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் இதற்கு ஆளாகியுள்ளனர். இதன் கொடூரம், இது எவ்வாறு பரவுகின்றது, இதனைப் பரவாமல் தடுப்பதில் உள்ள இடர்பாடு, எமது சமூகத்தில் இந்நோய்க்குரிய நிலை என்பன பற்றி ஆராய்ந்து ஒரு விளக்கக் கட்டுரை.

ஆ) எமது தாய்மொழி இன்று பெரிதும் வளர்ச்சியடையவேண்டியுள்ளது. எமது மொழியின் தொன்மை அதன் சிறப்புக்கள், இலக்கியங்கள், இலக்கணங்கள், பெரியோர்கள் என்பனவற்றை வலியுறுத்தி தமிழ் மாணவர் மன்றக் கூட்டத்தில் நீர் நிகழ்த்தும் சொற்பொழிவு.

இ) எமது நாட்டில் ஆடைக் கலாசாரம் மிகவும் சீரழிந்த நிலையிலுள்ளது. எமது பண்டைய கலாசாரமும், அதன் சிறப்புகளும் நவீன கலாசாரத்தால் ஏற்பட்டுள்ள சமூகப் பாதிப்புக்களையும் எடுத்துக் கூறி உமது கருத்து வெளிப்பாடு.

ஈ) தமிழுக்காக அருந்தொண்டாற்றிய பெரியார்களில் முத்தமிழ் வித்தகரும் ஒருவராவர். இவரது கல்விப் பணிகள், இலக்கியப் பணிகள், பிற பணிகள் என்பன பற்றி ஆராய்ந்து ஒரு விமர்சனக் கட்டுரை.

உ) கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழிக்குப் பொருத்தமான சிறுகதை ஒன்று எழுதுக.

*(30 புள்ளிகள்)*

**02) கீழே தரப்பட்ட அ, ஆ, இ, ஈ என்னும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15 - 20 சொற்களில் அமையுமாறு வேறு வேறாக எழுதுக.**

அ) அன்பென்றால் என்ன? அது பல வண்ணமுள்ள வானவில்லுப் போன்றது. வாழ்வென்னும் இருண்ட முகிற் கூட்டங்களை ஒளியில் தோய வைப்பது; மக்களுக்கு மகிழ்ச்சியை வாரி வாரி இறைப்பது. நித்திரையில் ஆழ்ந்திருக்கும் குழந்தையைப் பாருங்கள். அங்கே தொட்டிலை ஆட்டிக்கொண்டு நிற்கும் தாயின் உள்ளத்தில் உதிப்பது என்ன? இந்த அன்புதான். சுடு காட்டில் ஆதரவாக கூடி நிற்போர் உள்ளத்தில் மிளிர்வது என்ன? இதே அன்பு தான். எம்மைப் போன்ற சாதாரண மக்களை அரசகுமாரர் ஆக்குவது அன்பெனும் மந்திரவித்தை அன்றோ? பெரிய வெற்றி வீரனின் அருஞ் செயல்களுக்கு ஆதாரமாயிருப்பது அன்பன்றோ?

ஆ) மொழியில் ஏனைய அறிவியல்கள் யாவற்றையும் விருத்தி செய்வதற்கு மாண வருக்கு மிகமிக இன்றியமையாது இருப்பது எழுத்தாகும். மொழிக் கல்வியில் மாணவர் தமது ஆக்கத்தை வெளிப்படுத்த உதவுவது எழுத்தாகும். இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் கேட்பதாலும் பார்ப்பதாலும் அதிக அறிவைப் பெறுகின்றனர். என்ற மனோபாவம், எழுத்தில் கவனமின்மையை உருவாக்கி யிருக்கிறது. இந்நிலையிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்து எழுத்தின்பால் கவனம் செலுத்தவைக்கவேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும். மாணவர் களது அறிவை மதிப்பீடு செய்யும் சாதனமாக அமைவது எழுத்தாகும்.

இ) நாட்டின் உயிர்நாடியாக இருப்பன கிராமங்களே. கிராமங்கள் நாட்டின் பெரும் பகுதியை அடக்கியுள்ளன. அங்கேதான் பாமர மக்களின் உண்மையான வர லாற்றையும் அவர்கள் உள்ளத்தில் இயற்கையாக பொங்கி வழியும் உணர்ச்சி களையும் கண்ணாரக் காண்கின்றோம். உழவர் நிலத்தை வெட்டி உழுது பண் படுத்தல், விதைத்தல், நாற்று நடுதல், நீர்ப்பாச்சுதல், களைபிடுங்குதல், அரிவு வெட்டுதல், நாரடித்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்றார்கள். இடையர் ஆடு, மாடுகளை மேய்க்கின்றனர். ஆறு, கடலை அடுத்துள்ளோர் தோணி ஓட்டுதல், மீன் பிடித்தல் என்பவற்றைச் செய்கின்றனர். மற்றும் தொழிலாளர் நெய்தல், வனைதல், சிற்பம், செக்காட்டுதல் ஆகிய தொழில்களை ஆக்குகின்றனர். பல்காலும் காற்றினால் அலைக்கப்படாத எத்தகைய மரமும் வலுவாய் உறுதி யாய் நிலைப்பதில்லை. ஆனால், அடுத்தடுத்துக் காற்றினால் அசைக்கப்படும் மரமோ உரம் ஏறப் பெற்று நிலத்திலே அழுத்தமாக வேர் ஊன்றுகின்றது. நாற்புறமும் அடைப்பாக உள்ள பள்ளத்தாக்குகளில் வளரும் மரங்கள் எளிதில் முறிந்துவிடும் இயல்பின. ஆகவே அச்சத்துக்கேதுவான நிகழ்ச்சிகளின் நடுவே உயிர் வாழப் பெறுவதே நல்லோன் ஒருவனுக்கு நன்மையளிக்கின்றது.

*(20 புள்ளிகள்)*

**03) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்க ளுக்கு விடை எழுதுக.**

மக்கள் பல வகையினர் அவர்களுள் ஈரநெஞ்சினரும் உளர். தீர நெஞ்சினரும் உளர். ஈர நெஞ்சினரை வள்ளல்கள் என வாழ்த்துவர். தீர நெஞ்சினரை வீரர்கள் என போற்றுவர். இவ் உலகில் ஈரமும் தீரமும் ஒருசேர அமையப்பெற்ற பண்புடை மாந்தர்களும் உளர். அத்தகையோர் கொடைமடம் படுவரேயன்றிப் படைமடம் படார். அவர்கள் தம்மை நாடி வருவார்க்கும் தேடி வருவார்க்கும் கோடி கொடுத்து மகிழ்வர். அன்னர், இன்னர், இனியாரென எண்ணாது தக்கார் தகவிலர் என ஆரா யாது வரையாது வழங்குவர். ஈந்துவக்கும் இன்பமே விளைவர் கைமாறு கருதாது "கருவி" வானம் போல வரையாது சுரக்கும் வள்ளியோராய்த் திகழ்வர். பொருளைக் கொடுக்கும்போது தகுதி பாராது வழங்கிய அவர்கள் படையெடுக்கும்போது மட்டும் மாற்றாரின் தகுதியறிந்தே படையெடுப்பர். வலியார் மாட்டுப்படை நடத்து வதேயன்றித் எளியார் மாட்டுப்படை செலுத்தார். ஈரத்தில் தகுதி பார்க்காது வீரத் திலும் தீரத்திலும் தகுதி பார்க்கும் அத்தகையோரையே கொடைமடம் பட்டுப் படைமடம்படாதவர் எனப் புகழ்வர். அத்தகைய பண்பாளர்கள் பலர் தமிழகத்தில் வாழ்ந்து மறைந்திருக்கின்றனர்.அப்பண்பாளர்களுள் ஒருவராகக் கருதத்தக்கவர் கொல்லி மலையை ஆண்ட வல்வில் ஓரி என்பவராவர். உலகு போற்ற உயர் வாழ்வு வாழ்ந்தவர் ஓரி. அவர் கொல்லி மலைப் பகுதியை ஆண்ட குறுநில மன் னன். ஓரி என்னும் குதிரையை உடையவராகையால் அவரை ஓரி என்றழைத்தனர். வில்லாற்றல் மிக்க வேந்தனாக வாழ்ந்ததால் கல்லாடனார் அவரை "வல்வில் ஓரி" என வாழ்த்தினார்.

01) "கொடைமடம் படுபவரேயன்றிப் படைமடம் படார்" எனும் சொற்றொடரை விளக்குக.

02) ஈரநெஞ்சினர் எவ்வாறு அழைக்கப்படுவர்?

03) ஓரியின் வீரத்தன்மையைக் கல்லாடனார் எனும் புலவர் என்ன சொற்றொடரால் புலப்படுத்துகிறார்?

04) மாற்றார், கொடைமடம், படைமடம் ஆகிய சொற்களுக்கு பொருள் தருக.

05) வாசித்த உரைப் பகுதியின் மையக் கருத்து யாது?

06) கைம்மாறு கருதாத வள்ளற்றன்மைக்காகக் கூறப்படும் உவமையாது?

*(15 புள்ளிகள்)*

**04) மது எனும் அரக்கன் எம் இனத்தையே அழிக்கப் புறப்பட்டுவிட்டான் என மக்கள் பெரும் கவலைப்படுகின்றனர். இக்கருத்தை ஒப்புக்கொண்டு**

01) மது வகைகள் எவை?

02) அவற்றின் தீங்குகள் யாவை?

03) அவற்றின் பிடியிலிருந்து எவ்வாறு மீளலாம்?

என்பவற்றை விளங்கி செய்தித்தாள் ஒன்றிற்கு 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

*(15 புள்ளிகள்)*

# கல்விச்சாலைக் காட்சிகள்



அண்மையில் நடைபெற்ற அளவெட்டி முதலியவேள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் விநோத உடைப் போட்டியில் பங்குபற்றிய மழலைச் செல்வங்களைப் படத்தில் காணலாம். (10)



மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலையின் புனரமைக்கப்பட்ட மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட தீவக கல்விவலயக் கணக்காளர் ஏ.தேவஅருள்ராஜ் புனரமைக்கப்பட்ட மைதா னத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் க.குமரேஸ்வரநாதனும் காணப்படுகிறார். *(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)*



புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற அதிபர் செல்வி ம.சுப்பிரமணியம் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார். அருகில் வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம், உடற்கல்விப் பொறுப்பாசிரியர் ப.திருக்குமார் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம் : மண்டைதீவுச் செய்தியாளர்)*

## புதிய பணிமனை திறப்பு விழா

யாழ்.சாலை பரந்தனில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வடபிராந்திய பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பணிமனை எதிர்வரும் 2004-10-02 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் சங்கத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்,
வ.பி.பா.ஊ.உ.ரி.கூ.சங்கம்,
பரந்தன், கிளிநொச்சி.

(சி-37827) (26-19-46)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1940 - 06 - 26



மறைவு 2004 - 08 - 29

### திருமதி இராசதுரை மகேஸ்வரி

எமது பாசமிகு அன்புத் தெய்வமே!
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து
நாம் எல்லோரும் ஒன்றாக மகிழ்ந்திருப்போம்
என நினைக்கையில் எம்மையெல்லாம்
விட்டுப் பிரிந்து விட்டீர்களே ஆறாது எம் மனக்கவலை
உங்கள் ஆத்ம சாந்தியடைய
என்றும் பிரார்த்திப்போமாக.

இன்று (28-09-2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி-37863) (26-19-46)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், பெறாமக்கள்.

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

31ஆம் நாள்



திருமதி
**யோகரெத்தினம் நடராசா**
தோற்றம் 17-09-1924
மறைவு 29-08-2004

15ஆம் ஆண்டு



அமரர்
**விசுவலிங்கம் நடராசா**
தோற்றம் 01-04-1919
மறைவு 19-08-1989

அன்பான தெய்வங்களே ஆறவில்லை
எம் துயரம் தேடுகின்றோம் உங்கள் பாசத்தை
மீண்டும் வருவீர்களா?

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.75, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(36911) (26-19-46)

உங்கள் நினைவுடன் வாழும்:
- குடும்பத்தினர்.

# பிரான்பற்று உப தபாலகத்தை மீண்டும் இயக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு.செப்28

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக செயற்படாதிருக்கும் பிரான்பற்று உப தபால் அலுவலகத்தை மீண்டும் இயங்குவதற்கு ஏற்பாடு செய்துதருமாறு பிரான்பற்று மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ்.மாவட்ட தபால் சேவை அத்தியட்சகரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"எமது கிராமத்தில் உப தபால் அலுவலகம் செயற்படாதிருப்பதால் கிராம மக்கள் முத்திரை வாங்குவதற்கும் இதர தபால் தேவைகளுக்கும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தை நாடிச் செல்லும் நிலை கடந்த பல வருடங்களாக நிலவிவருகின்றது.

மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறும வயோதிபர்களும் அங்கு சென்றே தங்களுக்கான கொடுப்பனவைப் பெற்றுவருகின்றனர்.

இக்கிராமத்தில் முன்னர் இயங்கிவந்த உப தபால் அலுவலகம் சில காரணங்களால் 15 வருட காலமாக மூடப்பட்டுள்ளது. இதனை மீண்டும் ஆரம்பிக்குமாறு கிராம மக்கள் பல தடவைகள் கேட்டுள்ளபோதிலும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

ஆகவே, விரைவில் இங்கு உப தபால் நிலையம் ஒன்றைத் திறப்பதற்கு ஆவணசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (8-135-202)

## எழுச்சிப் பேரவை சங்க நிகழ்வு

வலி.தென்மேற்கு.செப்.28

சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (4-135)

## பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்



எம் மண்ணின் மைந்தனும் தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய உப தலைவரும் சனசமூக நிலைய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருபவரும் யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபருமாகிய

### உயர்திரு. ச.கைலாசநாதன்

அவர்கள் தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளதையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மென்மேலும் பதவி உயர்வுகள் பெற்று கல்வி உலகிற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (36913) (32-19-46-26)

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா
சனசமூக நிலையம், சுழிபுரம்


Dialog GSM

டயலொக்

100/-, 400/-, 1000/- விலைகளில்
கையடக்க தொலைபேசி அட்டைகளையும்,
Sim இணைப்புக்களையும்
மொத்தமாகவும்,சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

kit
எந்நேரமும் உன்னுடன்....!

Sri Murugan
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392 Fax: 222 3435.

(சி-37336)


## பளைப் பிரதேச மாணவர்களுக்கு இலவச வகுப்புகள்

தென்மராட்சி,செப்.28

பளைப் பிரதேச மாணவர்களுக்கான மாலை நேர இலவச வகுப்புகள் புலோப்பளை புனித இராயப்பர் தேவாலயப் பங்குச் சபையினால் நடத்தப்பட்டு வருகின்றன.

தேவாலய பங்குத் தந்தை அருட்திரு வசந்தசீலன் அடிகளின் வழிநடத்தலில் புலோப்பளை றோ.க.த.க. பாடசாலையில் இவ் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாலை நேர வகுப்புக்களில் தரம் 1 தொடக்கம் தரம் 11வரை கற்பிக்கப்படுகின்றன.

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு மாணவர்கள் இந்த வகுப்புகளில் பங்குபற்றி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மேலதிக மருந்துவகைகளின் விவரங்களை அனுப்பப் பணிப்பு

குருநகர்,செப்.28

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின்கீழ் இயங்கும் வைத்திய நிலையங்களில் பாவிக்காத நிலையில் மேலதிகமாக மருந்துவகைகள் இருந்தால் அவைகள் தொடர்பான விவரங்களை உடன் அறிவிக்குமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.தா. சிவபாதம் இவ்வைத்தியசாலைப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் கோரியுள்ளார்.

அத்துடன், இந்த வைத்திய நிலையங்களில் உள்ள மேலதிகப் பொருள்கள் பற்றிய விவரங்களை அறியத்தருமாறும் அவர் கோரியுள்ளார். (8)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யா/செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை அதிபர்
திரு.ந.சிறீதரன்
அவர்களின் தாயார்

### திருமதி நடராசா யோகரத்தினம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
நல்லூர்க் கோட்டம்.

(36909) (26-19-46)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**S.R.பொன்னம்பலம்**
(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)



பிறப்பு
04-07-1924
இறப்பு
23-09-1991
திதி:28-09-2004

நெருநல் உளனொருவன்
இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்து இவ்வுலகு.

மீசாலை கிழக்கு. (சி-37859)(42-19-46-26)

- மனைவி.

## 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை**
29-08-2004 இல்
சிவபதமடைந்த எமது சங்க
அங்கத்தவர்
திரு.த.கேதீஸ்வரன் (அரசன்)
அவர்களின் தந்தையார்
**கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு நாளில்
ஆறாத்துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகிகள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம்,
சாவகச்சேரி.

(36875) (26-19-46)


நீங்களும் அறிவிப்பாளராகுங்கள்
யாழ்ப்பாணத்தில்
MMIC யின்
புதிய
வகுப்புகள்
ஆரம்பம்



தொலைபேசி:-
0777-316258

அறிவிப்பாளர், ஒலிபரப்பாளர் பயிற்சி நெறி

| | | | | |
|---|---|---|---|---|
| பிரிவு 1 | 1/10/2004 | வெள்ளி | 2.00 | p.m |
| பிரிவு 2 | 2/10/2004 | சனி | 1.30 | p.m |
| பிரிவு 3 | 24/10/2004 | ஞாயிறு | 9.00 | a.m |
| பிரிவு 4 | 31/10/2004 | ஞாயிறு | 1.30 | p.m |

ஒலிபரப்பு சம்பந்தமான சகல விடயங்களும் நம்நாட்டு வானொலி, தொலைக்காட்சியின் மூத்த ஒலிபரப்பாளர்களாலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் விரிவுரைகளும் பயிற்சிகளும் வழங்கப்படும்.

டிப்ளோமா தபால் மூல வகுப்புகளும் உண்டு.

இல. 15, சிறாம்பியடிலேன்,
மணியம்ஸ் பில்டிங், ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

20% கழிவு

(சி-37889)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
01 - 09 - 1934



ஆண்டவன் அடியில்
29 - 08 - 2004

## அமரர் மயிலு கணேஷ்

அமரர் மயிலு கணேஷ் அவர்களின் மறைவு குறித்து துயரில் ஆழ்ந்திருக்கும் எமக்கு, தங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு எமக்குதவிய அனைவருக்கும் எமது மனமுவர்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம். (36931)(42-32-45-19) - குடும்பத்தினர்.

## MOVIMONDO TENDER ADVISE

### OPENING OF THE TENDER FOR FISHING NETS PUBLISHED ON 11-14 SEPTEMBER 2004

The tender will be open on 4th October 2004 at 10.00 a.m. in the Movimondo's office in Jaffna, 28, Cathedral Rd.The Tenderers interested can assist. All the tender's documents will be available in Movimondo's office in Colombo, 5/5, Police Park Terrace on 7th October 2004 (36917)(35-44-16-32)

## கண்ணீர் அஞ்சலி

### வைத்திய கலாநிதி S.A. குஞ்சிதபாதம்

எமது கல்லூரியின் பழைய மாணவரும் கொழும்பு ஆயுள்வேத கல்லூரியிலும் எமது கல்லூரியிலும் விரிவுரையாளராகவும் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகவும் பதவிவகித்தவருமான வைத்திய கலாநிதி

### S.A குஞ்சிதபாதம்

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரிச் சமூகம்.

(36925) (32-16-45)

## பதவி வெற்றிடம்

**பதவி: காப்புறுதி பிரதிநிதி**

தகைமைகள் : மிகச்சிறந்த தொடர்பாடல் தகைமை, அதிகளவு உழைக்கும் ஆர்வம் இருத்தல் வேண்டும்.
முன்னனுபவம் அவசியமில்லை.
பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

வெகுமதிகள்: கவர்ச்சிகரமான வருமான சந்தர்ப்பங்கள்
மோட்டார் சைக்கிள்/ வாகன கடன் வசதி,
ஆயுள் காப்புறுதி மாதாந்த/வருடாந்த போட்டிகள்.
பதவியுயர்வு வாய்ப்புக்கள்.

★ தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முழுமையான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும்.

சுயவிவரக்கோவைகளை 04.10.2004 இற்கு முன் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விளம்பர இலக்கம்: 2393
C/O உதயன்,
யாழ்ப்பாணம்

(36925) (32-16-45)

## தென்னங்கன்று விநியோகம

தென்னை அபிவிருத்திச்சபை, பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்திற்கு ஒரு தொகை நல்ல இன தென்னம்பிள்ளைகளை இவ்வாரம் வழங்கவுள்ளது.

மூன்றரை வருடத்தில் காய்க்கும் இனமான இந்த தென்னம் பிள்ளைகளை சகாய விலையில் பெற விரும்புவோர் தங்கள் பெயர்களை சமமேளனத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

(4-135)

## மாதாந்தக் கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தென்மராட்சிக் கிளை ஆதரவாளர்களுக்கான மாதாந்தக் கருத்தரங்கு இன்று காலை 9.30மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் நிர்வாகச் செயலாளருமாகிய ந.ரவிராஜ் தலைமையில் சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலை உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் பற்றி இக் கருத்தரங்கில் ஆராய இருப்பதால் கட்சியின் தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(102,75)

## தியாகிகள்....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாத நிலையில் திலீபன் உயிர்விட்ட காட்சியை நாம் கண்டோம்.

### ஈழத்தமிழர் இதயத்தில் இடம்பெற்றுள்ள அண்ணாமலை அரசரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும்



"கண்ணுடையவர் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்" என்ற, வள்ளுவர் குறளுக்கு விளக்கம் அளிக்கின்ற முறையில் கண்ணுடைய கற்றோராக தமிழ் மக்களை வாழச்செய்தவர் நம் அண்ணாமலை அரசர். விபுலானந்த அடிகள் தனிநாயக அடிகள் மற்றும் ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பலர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குப் புகழ்சேர்த்து வந்ததுடன் தாமும் புகழ்பெற்று வாழ்ந்தனர். அண்ணாமலை அரசர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியதோடு, தமிழ் இசைக்குப் புத்துயிர் வழங்கியவர். புகழ் படைத்த தாமரைத்தடாகப் பாடலைத் தந்த தண்டபாணி தேசிகர் முருகனை எம்முன்னே நிறுத்திய சீர்காழி கோவிந்தராசன் ஆகியோரிடம் தமிழிசை பயின்ற பலர் ஈழத்துத் தலைசிறந்த இசை வல்லுநர்களாக விளங்குவதை நாடு அறியும். அண்ணாமலை அரசரின் தோற்றம் செப்ரெம்பர் 30ஆகும்.

சுருங்கக்கூறின் செப்ரெம்பர் முதல் தொடங்கி முப்பது வரை புகழ்பூத்த பெருமக்கள் - குறிப்பாக தமிழ் அறிஞர்கள் தோன்றி மறைந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. எனவே, செப்ரெம்பரின் புகழை நாம் அனைவரும் சேர்ந்து பாடுவோமாக!

## IELTS

By Lecturer from Colombo.
Diploma in English
A few more Vacancies
BRITISH BUSINESS SCHOOL
140, TEMPLE ROAD, JAFFNA.
TELEPHONE : 021-2225796

## யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடிவகுப்பு

பாடநெறி விளக்கம்

எந்தவொரு மொழியும் முதலில் கதைக்கப்படவேண்டும். கதைப்பதற்கு முன் இலக்கணம் கற்பிக்கப்படுமாயின் இலக்கண ரீதியான வசன உருவாக்கத்தினால் கதைக்கமுடியாத நிலை தோன்றும்.

1. எமது முதல் 10 வகுப்புகளில் இலக்கண ரீதியான வசன அமைப்பு இன்றி சரளமாக வசனங்களை உருவாக்குவதற்கான பயிற்சி.
2. 11 ஆம், 12 ஆம் வகுப்புகளில் முழுமையாக கதைப்பதற்கான பயிற்சி
3. 13 முதல் 24 ஆம் வகுப்பில் முழுமையான தேர்ச்சி

**சர்வதேச தரத்திலான இப்பாடநெறி மூலம் 24 வகுப்புகளில் முழுமையாக கதைக்க முடியாதவர்களுக்கு முழுப்பணமும் திருப்பித் தர உத்தரவாதம்.**

**யார் வகுப்புகளில் கலந்துகொள்ளலாம்?**

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர்கள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள், கணனி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், 8 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள்.

**50%** சலுகை நீடிப்பு:
04.10.2004 வரை பதிவுசெய்யும் அனைவருக்கும் பாடக்கட்டணத்தில் 50% சலுகையுடன் ஆங்கிலம் ரூபா 3000/- சிங்களம் ரூபா 2000/-.

எந்த ஒருவரும் எந்த நாளிலும் எந்த நேரத்திலும் வகுப்பில் கலந்து கொள்ளலாம். யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், பருத்தித்துறை, கோப்பாய் உட்பட 10இற்கு மேற்பட்ட இடங்களில் வகுப்புகள்.

மேலதிக விவரங்களுக்கு:
யாழ். தலைமையகம் அல்லது வகுப்பு நடைபெறும் இடங்களில்

## SAAMSTECH

Psalm Institute of Engineering and Technology
Colombo Head Office 22-1/4, Galle Road, Dehiwala. 0115540200
Jaffna Head Office 841, Hospital Road, Jaffna. T.P.NO:077 3068968
(சீ37865)(34-16-32-44)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

கே.கே.எஸ் றோட்டைச் சேர்ந்த நடேசன் - நிர்மலா தம்பதிகளின் ஏக புத்திரி

### ரிஷானி

**28.09.2004**



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.09.04)செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மிக சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

**செல்வி ரிஷானி** சகல கலைகளும் பெற்று நீடுழி வாழ்கவென அம்மா, அப்பா, அண்ணன்மார், பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், மாமா, மாமாமார், மாமிமார், உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

492, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம் (36921)(32-45-16) தகவல்: அக்கா கஜீ

## தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், சுழிபுரம் அதிர்ஸ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

மேற்படி சனசமூக நிலையத்தினால் 26.09.2004 இல் நடத்தப்பட்ட அதிர்ஸ்ட இலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:-

முதலாம் பரிசு இல.-135 இரண்டாம் பரிசு இல.- 198
மூன்றாம் பரிசு இல.- 2357 ஆறுதல் பரிசு இலக்கங்கள் :-
2202, 492, 1145, 2802, 686, 1107, 115, 676, 1274, 783

பரிசுகளை 10.10.2004இற்கு முன்னர் சீட்டுடன் வருகை தந்து நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (36914)(35-16-44-32) நிர்வாகம்.

## வாழும் கலை யோகாசனப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

01.10.2004 ஆரம்பம்

ஆசனம், பிரணாயாமம், கிரியா - முத்ரா, தியானம் ஆகிய பயிற்சிகள் அனைத்தும் அளிக்கப்படும்.

- மூன்று மாத காலத்தில் முழுமையான பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சிமுடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- உங்கள் பெயர்களை 01.10.2004 திகதிக்கு முன் பதிவுசெய்துகொள்ளவும்.

ஆசிரியர்:ம.நேசராஜ் (கண்ணன்)
Natiyakalaimany
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்தியா)
Diploma in Yoga therapy
Diploma in Yoga
D.H.I.Home
M.I.B.R.

பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம்:
UNIVENTURES
Institute of Business Management
55, மாட்டின் வீதி,யாழ்ப்பாணம்
T.P.:0777 918280, 021-222 7666

நீங்களும் வாழும் கலை பயிற்சிபெற்று உங்கள் வாழ்க்கையை ஓர் அற்புதக் கலையாக மாற்றலாமே! வாருங்கள் வந்து பயனடையுங்கள்.

(36919)(34-16-32-44)

# உழைத்துக் களைத்த விவசாயிகளை உவகைகொள்ள வைத்த கௌரவிப்பு

**யாழ்.** மாவட்ட விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகியன இணைந்து மாவட்டத்தின் சிறந்த விவசாயிகளை ஆண்டுதோறும் கௌரவித்து வருகின்றன.

புதிய விவசாயத் தொழில்நுட்பங்களையும் தாம் அறிந்த புதிய விடயங்களையும் ஏனைய விவசாயிகளுக்கும் தெரியப்படுத்தியதுடன் விவசாயச் செய்கையில் முழுநேர விவசாயியாக செயற்பட்டுத் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்ற விவசாயிகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் ஒரு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்து தலா மூன்று பேர் தெரிவுசெய்யப்பட்டு 36 விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர். ஆனால், இந்த ஆண்டில் ஒரு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்து தலா ஆறுபேர் வீதம் 72 விவசாயிகளும் மாவட்டத்தின் சிறந்த விவசாயிகளாக எட்டு விவசாயிகளும் தெரிவுசெய்யப்பட்டுக் கடந்த 24 ஆம் திகதி 80 விவசாயிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

நெற்செய்கை, மிளகாய்ச் செய்கை, வீட்டுத் தோட்டச் செய்கை, நீர்முகாமைத்துவம் உள்ளடக்கிய செய்கை, பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கை, வினைத்திறனான நிலப்பயன்பாட்டை உள்ளடக்கிய செய்கை ஆகிய ஆறு விடயங்களில் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்தும் ஒருங்கிணைந்த விவசாயச் செய்கை, பாதுகாப்பான விவசாயச் செய்கை, பழமர நடுகைப் பொருட்செய்கை, வாழைச் செய்கை, தேசிச் செய்கை, திராட்சைச் செய்கை, அழகுத் தாவரச் செய்கை, பாரம்பரிய சிறுதானியச் செய்கை ஆகிய எட்டு விடயங்களில் மாவட்ட ரீதியாகவும் இந்த 80 விவசாயிகளும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

விவசாய முயற்சியில் ஆர்வத்தை ஏற்படுத்தி உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் அதிகரிப்பதில் பொருத்தமான தொழில்நுட்பப் பாவனையை ஊக்குவித்து விவ்சாயத் துறையை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு விவசாயத் திணைக்களத்தினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கௌரவிப்பு நிகழ்வில் கௌரவிக்கப்படுவதற்காக வந்திருந்த 80 விவசாயிகளில் வயோதிபர்கள், நடுத்தர வயதினர், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பல தரப்பினரும் அடங்கியிருந்தனர். அவர்கள் அனைவரும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் வரவேற்கப்பட்டு இருக்கைகளில் அமர வைக்கப்பட்டனர். பின்னர் சம்பிரதாய நிகழ்வுகளைத் தொடர்ந்து விவசாயிகள் அனைவருக்கும் சிற்றுண்டிகளும் தேநீரும் வழங்கப்பட்டன. அதன் பின்னரே விருந்தினர் உரைகள், கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம்பெற்றன. யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விவசாயிகளைக் கௌரவித்ததுடன் தனது பாராட்டுதல்களையும் அவர்களுக்குத் தெரிவித்தார்.

கௌரவிக்கப்பட்ட சில விவசாயிகளிடம் இந்த நிகழ்வு பற்றியும் அவர்களது விவசாயச் செய்கை பற்றியும் நாம் கேட்டறிந்து கொண்டவற்றை இங்கே தருகிறோம்.

### பெ.பொன்னன் (புத்தூர் வடக்கு)



தற்பொழுது குடாநாட்டில் விவசாயச் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. இதற்கு முக்கியமான காரணம் இளைஞர் சமுதாயம் விவசாயத்தில் நாட்டம் செலுத்தாமையே. இளைஞர்களின் சிந்தனைகள் வேறுபட்டனவாக உள்ளன. அவர்கள் வெளிநாடு, மோட்டார் சைக்கிள், விளையாட்டு, ஆட்டம், பாட்டு, கூட்டம், கும்மாளம் என்று இருக்கிறார்கள். இதனால் என்ன பலன்.

தோட்டத்தில் களைபிடுங்கவோ, பாத்தி கட்டவோ, கொத்தவோ எதற்குமே கூலியாள்களைப் பிடிக்கமுடியாமல் உள்ளது. விவசாய உள்ளீடுகள் மற்றும் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதனால் எதிர்காலத்தில் விவசாயத்தை மறக்கும் நிலையே காணப்படுகிறது.

### ம.சத்தியேஸ்வரி (8ஆம் வட்டாரம், நயினாதீவு)



நயினாதீவைச் சேர்ந்த நான் பல வருடங்களாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகிறேன். தற்பொழுது கூட 10ஆயிரம் கன்றுகள் மிளகாய்ச் செய்கை பண்ணியுள்ளேன். எனது கணவர் மற்றும் எங்களது ஐந்து பிள்ளைகள் ஆகியோரும் எனக்கு உதவி புரிவார்கள். பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்ற போதிலும் பாடசாலை முடிந்து வீட்டுக்குவந்த பின்னர் தோட்டத்தில் வேலை செய்வார்கள்.

எனது குடும்பத்தின் முழுநேரத் தொழிலே விவசாயம்தான். இதனால்தான் எனது குடும்பம சீவிக்க முடிகிறது. சிலவேளைகளில் மழை பெய்யாது நீர்போதாமையினால் பயிர்ச் செய்கையில் நஷ்டமடைந்த சந்தர்ப்பங்களும் உண்டு. மற்றப்படி விவசாயத்தில் எதுவித பிரச்சினையுமில்லை.

### அ.பத்மாவதி (புத்தூர் மேற்கு)



வீட்டுத் தோட்ட செய்கையில் திறம்பட ஈடுபட்டமைக்காக என்னைத் தெரிவுசெய்து கௌரவித்ததற்காக மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வீட்டுத் தோட்டச் செய்கையானது பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு பொழுது போக்காகும். வீட்டில் சமையல் வேலை முடிந்த பின்னர் பெண்கள் தமது நேரத்தைப் பிரயோசன மாகக் கழிப்பதற்கு இது உகந்தது. அத்துடன் வீட்டுக்குத் தேவையான காய்கறிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எனது வீட்டுத் தோட்டத்தில் தக்காளி, வல்லாரை, வெண்டி போன்றவற்றைச் செய்கை பண்ணியுள்ளேன். அத்துடன் ஏனைய மரக்கறிப் பயிர்களையும் முன்பு செய்கை பண்ணினேன். கடந்த இரண்டு வருடங்களாக இச்செய்கையில் ஈடுபட்டு வருகிறேன்.

### சி.தனபாலன் (நாவாந்துறை வடக்கு)



நீர் முகாமைத்துவம் உள்ளடக்கிய பயிர்ச் செய்கையில் வேலணை விவசாய போதனாசிரியர் பிரிவில் என்னைத் தெரிவுசெய்து கௌரவித்துள்ளனர். விவசாய செய்கையானது தற்பொழுது மிகவும் பிரச்சினைக்குரியதாக மாறிவருகிறது. நீர் வசதி குறைந்து வரும் நிலையில் நஷ்டமடைய வேண்டியும் ஏற்படுகிறது.

அத்துடன் போக்குவரத்துப் பிரச்சினை, சந்தைப்படுத்தல் வசதியின்மை போன்றவற்றால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. எமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்துவதற்கு யாழ்ப்பாண நகரப் பகுதிக்கே வரவேண்டியுள்ளது. இதனால் எமது நேரம் விரயமாவதுடன் பணப்பிரச்சினையும் ஏற்படுகிறது.

### ஐங்கரன் மகேஸ்வரி (வேலணை மேற்கு)



கடந்த 8வருடங்களாக வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வருகிறேன். பல்வேறு பயிர்களையும் இக்கா●ப்பகுதியில் செய்கை பண்ணினேன். தற்பொழுது மிளகாய், கத்தரி, வாழை போன்ற பயிர்கள் எனது வீட்டுத் தோட்டத்தில் உள்ளன.

அத்துடன் எனது கணவரும் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார். அவரும் எனக்கு உதவி புரிவார். எனக்கு இந்தக் கௌரவிப்புக் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இதனால் எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாக வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது.

### சந்திரசேகர் அமுதினி (போக்கறுப்பு)



பெண் தலைமைத்துவ விவசாயச் செய்கைககாக அம்பன் விவசாய போதனாசிரியர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்டேன்.

நான் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வருவதுடன் பல்வேறு பொது அமைப்புக்களிலும் அங்கத்துவம் வகிக்கிறேன். மாதர் சங்கத்தின் தலைவியாகவும் உள்ளேன். பெண்களைப் பொறுத்தவரையில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவது மிகவும் பயன் தரும் விடயமாகும். அத்துடன், பெண் தலைமைத்துவமானது சமுதாயத்தில் மக்களுக்குப் பணியாற்றவேண்டிய பொறுப்பை ஏற்படுத்தித் தரக் கூடியது. என்னைத் தெரிவுசெய்து கௌரவித்ததன் மூலம் மேலும் எனக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளனர் விவசாயத் திணைக்களத்தினர். இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து பொதுமக்களுக்காகப் பணியாற்றுவேன்.

**தொகுப்பு : வைஷாலி**

கௌரவிப்பு நிகழ்வு நிறைவடைந்ததும் விவசாயிகளுக்கும் விவசாயப் போதனாசிரியர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் இடையில் கலந்துரையாடலும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது. உழைத்துக் களைக்கும் விவசாயிகள் கௌரவிக்கப்படுவது ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும்.

அவர்களும் இதனை நடத்திவரும் விவசாயத் திணைக்களத்தினரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. ★

## கமமும் புலமும்

தயாரிப்பு : ஜெயஸ்ரீ


### ச.சின்னத்துரை (உதவி விவசாயப் பணிப்பாளர்)




கடந்த ஆண்டுகளில் ஒவ்வொரு விவசாய போதனாசிரியர் பிரிவில் இருந்தும் தலா 3பேரைத் தெரிவுசெய்து கௌரவித்தோம். இந்த ஆண்டில் தலா 6 பேரைத் தெரிவுசெய்து கௌரவித்துள்ளோம்.

அனைவருக்கும் சான் றிதழும் தலா 600ரூபாவுக்கான காசோலையும் வழங்கியுள்ளோம். இது அவர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாக அமையும். நான்காவது ஆண்டாக இந்தக் கௌரவிப்பு நிகழ்வை நடத்தி வருகிறோம்.







சான்றிதழ் பெறும் விவசாயிகள் சிலர்

படங்கள் : தீபன்

### 4ஆவது மினி உலகக் கிண்ணப் போட்டியில்

# அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியோரில் அன்ட்றூ பிளிண்டொப் முதலிடத்தில்

லண்டன்,செப்.28

இங்கிலாந்தில் கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 25ஆம்திகதி வரை நடைபெற்றுமுடிந்த மினி உலகக் கிண்ணப் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியோர் வரிசையில் இங்கிலாந்து அணியின் பிளிண்டொப் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அவர் நான்கு போட்டிகளில் விளையாடி அதிகபட்சமாக 9 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் இங்கிலாந்து அணியின் இன்னொரு வீரரான ஹார்மிசன் உள்ளார். இவர் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். மூன்றாவது இடத்தில் ஆஸ்திரேலிய அணியின் கஸ்பரோவிச் மேற்கிந்திய அணியின் கிறிஸ் கைல் ஆகியோர் உள்ளனர். இவர்கள் இருவரும் தலா 7விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர்.

விக்கெட்டுக்களை வீழ்த்திய ஏனைய வீரர்களின் விவரம் வருமாறு:

ஜேக்கம் ஓராம் (6 விக்கெட்டுகள்), கிலெஸ்பி (6 விக்கெட்டுகள்), சொகைப் அக்தர் (6 விக்கெட்டுகள்), இர்பான் பதான் (5 விக்கெட்டுகள்), நிற்னி (5 விக்கெட்டுகள்), டெரன் கௌவ் (5விக்கெட்டுகள்), சஹீட் அப்ரிடி (5 விக்கெட்டுகள்), பிராட்ஷோ (5 விக்கெட்டுகள்), வேவல் ஹிண்ட்ஸ் (5 விக்கெட்டுகள்).

இதேவேளை, இந்த மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் மொத்தமாக 4 சதங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. 15போட்டிகள் நடைபெற்ற போதும் நான்கு போட்டிகளில் மட்டுமே சதங்கள் பெறப்பட்டுள்ளன.

நியூஸிலாந்து அணிவீரர் நதன் ஆஷ்லே (145), இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் அன்ட்றூ பிளிண்டொப் (104), தென்னாபிரிக்க அணிவீரர் ஹேர்சல் கிப்ஸ் (101), இங்கிலாந்து அணிவீரர் மார்க்கஸ் ரெஸ் கோதிக் (104) ஆகிய நால்வருமே சதங்களைப் பெற்றவர்களாவர். இவர்களில் இருவர் இங்கிலாந்து அணி வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய அணியின் சகலதுறை வீரர் கிறிஸ்கைல் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் 99 ஓட்டங்களுடனும் இந்திய அணித் தலைவர் கென்ய அணியுடனான போட்டியில் 90 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததனால் சதங்களைத் தவறவிட்டனர். (10)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:

★ மாலை 4 மணி - பாடும்மீன் வி.க.எதிர் யாழ்.பல்கலைக்கழகம் வி.க.

★ மாலை 5 மணி - சென்.அன்ரனிஸ் வி.க. எதிர் சென்.நீக்கலஸ் வி.க.

(10)



அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்.மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதில், யாழ்.மாவட்ட மெய்வன்மைப் போட்டி அணித்தலைவர் பொ.கிருபானந்தன், அணித்தலைவி என்.சிறீவித்தியா ஆகியோர் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திடமிருந்து கேடயத்தைப் பெறுவதைப்படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்.)*





உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்ற மானிப்பாய் பிரதேசசபை அணியினரை முதலாவது படத்திலும் -

வெற்றிக் கிண்ணங்களுடன் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (10-185)

### விளையாட்டு நிகழ்வுகளின்போது

# ஏற்பட்ட பிரச்சினைகளை விசாரிக்க பொலீஸார் முனைவு

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ். குடாநாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விசாரணை செய்வதற்கு யாழ். பொலீஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக சிறு குற்றத்தடுப்புப் பொலீஸ் அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்பட்டு அவை அடிதடியில் முடிவடைந்தமை தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட சர்ச்சைகள் தொடர்பாகவும், பிரச்சினைகள் தொடர்பாகவும் எம்மிடம் ஏராளமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விளையாட்டுப் போட்டிகளின்போது மைதானங்களில் கழகங்களுக்கிடையில் ஏற்பட்ட சிறிய பிரச்சினைகள் பகைமையை வளர்த்து அதனூடாகப் பல சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், இந்த விடயத்தை மிகவும் அக்கறையுடன் அணுகி இவ்வாறு பிரச்சினைகளுக்குள்ளான விளையாட்டுக்கழகத்தினரை விசாரணைசெய்து அவர்களுக்கிடையே சமரச முயற்சியினை ஏற்படுத்த உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(10-13)

## வடமராட்சி கிழக்குக்கு விரைவில் மின்சாரம்

செம்பியன்பற்று,செப்.28

வடமராட்சி கிழக்குக் கிராமங்களான பொற்பதி, குடத்தனை, மணற்காடு, அம்பன் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மின்விநியோகத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 2கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

(4-36)

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் சிவயோகநாயகி



சூறாவத்தையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 23, மணல்தரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் சிவயோகநாயகி நேற்று (27.09.2004)திங்கட்கிழமை காலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமியினதும் செல்லமுத்துவினதும் அருமை மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் (சுந்தரம் பிரதர்ஸ் உரிமையாளர்)அவர்களின் அன்பு மனைவியும் சிவசுந்தரி(கனடா), யோகசுந்தரம், தேவசுந்தரம் (கனடா), ஜெயசுந்தரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகநாதன் (கனடா), சுகந்தகுமாரி, சுமங்கலி (கனடா), தேவகுமார் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுதர்சன் (கனடா), சிவப்பிரியா (கனடா), சுரேஸ்ரன் (கனடா), பிரதீப் (கனடா), தினேஸ (யா/இந்துக்கல்லூரி), விநோதா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), கேஷாந்தன் (கனடா), மதுராஸா (கனடா), கஜிந்தன்(கொழும்பு), நிரோஸன் (கொழும்பு), சகனா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
திருமதி சுகந்தகுமாரி யோகசுந்தரம் (மருமகள்)

*மணல்தரை லேன், கந்தர்மடம்.*

(36942)(35)

## அறிவியல் கருத்தரங்கின் 5ஆவது தொடர் இன்று

யாழ்ப்பாணம்,செப்.28

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையமும் கிராம நல்லொழுக்க சிக்கன கடன் வழங்கும் சங்கமும் இணைந்து நடத்தும் அறிவியல் கருத்தரங்கின் ஐந்தாம் தொடர் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'அபிவிருத்தியும் மக்களும்' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் எஸ்.ஜெயராஜும் 'நிறைவான கிராம அபிவிருத்தி' என்ற தலைப்பில் நிகொட் நிறுவனத் திட்ட இணைப்பாளர் கெங்காதரனும் 'கல்வியும் மக்களும்' என்ற தலைப்பில் சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி.செல்லையாவும் 'சமுகமும் சனசமூக நிலையமும்' என்ற தலைப்பில தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக உத்தியோகத்தரும் 'பிரதேச சபையின் செயற்பாடும் மக்களும்' என்ற தலைப்பில் வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சிவலிங்கமும் 'சேமிப்பும் மக்களும்' என்ற தலைப்பில் சேவா லங்கா மன்றத்தின் மாவட்டப் பணிப்பாளர் ஆனந்தராசாவும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (10-202)

## பௌர்ணமி விழா

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் பொது நூலக அபிவிருத்திச் சபை நடத்தும் மாதாந்த பௌர்ணமி விழா நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்குக் கொடிகாமம் கேட்போர் கூடத்தில் கு.வல்லிபுரம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்வார். கலைநிகழ்வில் சாவகச்சேரி நவாலயா மன்றத்தின் "அன்னக்கிளி உன்னைத் தேடுதே" என்னும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4-117)

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம்
பல நோ.கூ.
சங்கத் தலைவரும்
யாழ். மாவட்ட
கூ.கிராமிய
வங்கியின் சமாசத்
தலைவருமான
திரு.சி.குமரவேல்
அவர்களின் அன்புத்
துணைவியார்



### திருமதி கு.திலகவதி

(சுன்னாகம் பல நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தையும் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

★ திரு.சு.தம்பித்துரை (இளைப்பாறிய அதிபர்) குடும்பம்,
டாக்டர் ச.அருமைநாயகம் குடும்பம்
சுன்னாகம்

★ டாக்டர் ஈ.காசிநாதன் குடும்பம்,
திரு.க.சிவபவன், திரு.செ.மனோகரன் குடும்பம் (லண்டன்)

★ டாக்டர் செ.நவீனகுமார் குடும்பம் (கொழும்பு)

(சி-37873)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
29
03
1938



உதிர்வு
29
08
2004

## அமரர் கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

மனிதரில் சிறந்த மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்தீர்
புனிதவாழ்வு வாழ்ந்து இன்று மறைந்து விட்டீரே!
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் சபீண்டிகரணக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

பூதவராயர் கோயிலடி,
மீசாலை வடக்கு. (36952)(32-18-16)

## வடிகால் சேதம்

குருநகர்,செப்.28

குருநகர் புதுமை மாதா மேற்கு வீதியில் அமைந்துள்ள வடிகால் சேதமடைந்த நிலையில் உள்ளதால சேறு மண்டிய நிலையில் காணப்படுகின்றது.

இவ் வடிகாலில் நீரோட்டம் தடைப்பட்டு பலநாள்களாக சேறுமண்டி உள்ளதனால் துர்நாற்றம் வீசிவருகின்றது.

அத்துடன், தடைபட்டுள்ள நீரினால் நுளம்பு பெருகி உள்ளதால் இப்பகுதி மக்கள் நோய்க்குள்ளாகும் நிலையும் உருவாகிவருகின்றது.

இது தொடர்பாக யாழ் மாநகரசபையின் சுத்திகரிப்பு பகுதியினரில் கட்டடப்பகுதியில் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (4-51)

# வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் உயர்திரு. க. இராசதுரை அவர்களின் 58ஆவது அகவை வாழ்த்து இன்று போல என்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி
அலுவலக உத்தியோகத்தர்கள்.
(36945)(35-32-18-46)

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் உயர் திரு.க.இராசதுரை அவர்களின் 58ஆவது அகவை வாழ்த்து 28.09.2004



திண்ணிய வல் தூய சித்த
மெண்ணிய நல் கரும மாற்றி
பண்புடை சொல் வல்லோர் வாழ்த்த
மண்ணுலகில் நீடு வாழி!

ஆசிரியர்கள், மாணவர்கள்.
(36949)(32-18-46)

# வாழ்த்துகின்றோம்



யூலன் வீதி, அச்செழுவில் வசிக்கும் கமலநாதன் - உதயமாலா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவியுமான

செல்வி **மயூரிகா** அவர்கள்

5ஆம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு (137 புள்ளிகள்) அவரை மனமார வாழ்த்துவதுடன், அவர் கல்வியில் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளினைத் தெரிவிக்கின்றோம்.

காந்தன் சித்தப்பா,
அப்பம்மா குடும்பத்தினர்.

வீமன்காமம்,
தெல்லிப்பழை. (36870) (34-32-18-46)

## ஜனநாயகசூழல் குறித்து ஆய்வு முயற்சி

யாழ்ப்பாணம், செப்.28

சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் (கொழும்பு) ஆதரவுடன் தெற்காசிய நாடுகளில் ஜனநாயகத்தின் நிலை என்ற தலைப்பிலான ஆய்வு முயற்சிகள் அகில இலங்கை ரீதியாக முனனெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட தேர்தல் தொகுதிகளில் இந்த ஆய்வு முயற்சிகளை இதற்கென அமர்த்தப்பட்ட கள ஆய்வாளர்கள் மேற்கொள்ளவுள்ளனர். (201)

# கண்ணீர் அஞ்சலி

வடக்கு - கிழக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் செயலாளரும் வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (NEIAP) திட்டப்பணிப்பாளருமான

திரு.ப. இராமநாதன் அவர்களின் அன்பு மனைவி

## திருமதி சாந்தினி இராமநாதன்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிறகின்றோம்.

பிரதித் திட்டப் பணிப்பாளரும்
அலுவலர்களும்
நியாப் பணிமனை, யாழ்ப்பாணம்.
(36950)(32-18-16-26)

## ச.ச.நிலையங்களுக்கு நன்கொடை

வரணி,செப்.28

சாவகச்சேரி பிரதேச சபையின்கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கும் 2005 இற்கான நன்கொடை பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேற்படி பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சகல சனசமூக நிலையங்களுக்கும் சனசமூக நிலையப் பரிசோதனை அறிக்கை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்படிவத்தை விரைவில் பூரணப்படுத்தி தமக்கு அனுப்பும்படியும் அனுப்பாத சனசமூக நிலையங்களுக்கு பணம் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-120)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வெங்கடசாமி
ஹரிகரன்
புள்ளி 154



வெங்கடசாமி
பிருந்தன்
புள்ளி 134

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும்
வெ.ஹரிகரன், வெ.பிருந்தன்

ஆகியோர் 2004 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு பாராட்டுவதுடன், அவர்கள் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

இந்தியா பெரியப்பாமார், சுவிஸ் சித்தப்பாமார், கொழும்பு சித்தப்பா, யாழ். சித்தப்பா, சித்தி, அருமைத் தங்கை நா. ஆஷிகா.

66,சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
(36893) (26-46-32-18)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19.07.1950
உதிர்வு 29.08.2004

## றப்பியல் தர்மதாஸ்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
அரு.11.25

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வெளிச்சவீட்டடி,
முனை, பருத்தித்துறை.
(36943) (32-18-46)

## வலி.மேற்கில் மீளக்குடியமர்ந்தோருக்கு யு.என்.எச்.சி.ஆர். உதவி

சங்கானை,செப்.28

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள A-9 பாதையூடாக யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கும் இதுவரை எந்த நிறுவனத்திடமிருந்தும் நிவாரணப் பொருள்களை பெற்றுக்கொள்ளாத - இரண்டு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வீட்டுப் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 639 குடும்பங்களுக்கு தலா 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருளகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் 2004ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

| மாணவர் பெயர் | பெற்றபுள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|
| 1.செல்வி ப.திருமகள் | 169 | 4 |
| 2.செல்வி செ.தேனுகா | 159 | 41 |
| 3.செல்வன் சு.அனுசன் | 144 | 186 |
| 4.செல்வி பா.ஜஸ்திகா | 140 | 278 |
| 5.செல்வி இ.லேனுசா | 134 | 456 |
| 6.செல்வன் சி.சுதர்சன் | 131 | 555 |
| 7.செல்வி க.விபியா | 131 | 555 |
| 8.செல்வன் வ.ஜஸ்மினன் | 129 | 636 |
| 9.செல்வன் ஞா.ரிசிகேசன் | 129 | 636 |
| 10.செல்வன் க.நிருஜன் | 127 | 730 |
| 11.செல்வி ம.கஸ்தூரி | 126 | 775 |
| 12.செல்வன் க.தனஞ்சயன் | 125 | 818 |
| 13.செல்வி வி.துலக்சி | 124 | 860 |

ஆகியோரையும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப்பெற்ற அனைத்து மாணவச் செல்வங்களையும் இவர்களுக்கு அயராது ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(36946)(26-32-18-46) - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# மரண அறிவித்தல்

## பென்னம்பலம் சிவசிதம்பரம்

(முன்னாள் லிகிதர், ஈழநாடு பத்திரிகை காரியாலயம் - அராலி மேற்கு)

அராலி மேற்கைச் சேர்ந்த பொன்னம்பலம் சிவசிதம்பரம் அவாகள் நேற்று (27-09-2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பழைய விதானையார் (அராலி மேற்கு, வடக்கு) பொன்னம்பலம் (பொன்னுத்துரை) - தையல்நாயகி தம்பதிகளின் ஏகபுத்திரனும் தேவநாயகியின் அன்புக் கணவரும் கபிலன் (ஜேர்மனி), மோகனாம்பாள், காந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சத்தியராணி (ஜேர்மனி), ஜெயேஸ்வரன் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் திலக்ஷனின் பேரனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (முன்னாள், ஆசிரியர் யாழ்.இந்துக் கல்லூரி), வைத்திலிங்கம் (முன்னாள் அதிபர், உரும்பிராய் இந்துக் கல லூரி) ஆகியோரின் பெறாமகனும் விஸ்வலிங்கத்தின் (வலி.[illegible] கிராமசபை) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-09-2004) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்துத்துறை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அராலி மேற்கு.
தகவல்: மனைவி,
மோகனா (மகள்), காந்தன் (மகன்).
(36940)(26-32-16-46)

### விஞ்ஞான பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### அறிவித்தல்

விஞ்ஞான பீட கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் 29.09.2004 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்
(சி-37876)

### லிகிதர்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு க.பொ.த (உ/த) வணிகப்பிரிவில் சித்திபெற்ற திறமையுள்ள இரு லிகிதர்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் 05.10.2004இற்கு முன் (தங்கள் சுயவிவரக் கோவையுடன்) தொடர்புகொள்ளவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது).

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-37874)(35)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

தோற்றம் 31 - 10 - 1926



மறைவு 29 - 08 - 2004

### திருமதி நல்லதம்பி இராசம்மா

எங்கள் உயிரின் உயிரான
அன்புத் தெய்வம் அம்மாவே!
எங்கே உங்கள் பாசமிகு வதனம்?
எங்கே உங்கள் பரிவானகுரல்?
நீங்கள் பிரிந்து இன்றுடன்
31 நாள்கள் சென்றுவிட்டனவே!
எங்கள் துயரம் தீரவில்லை
அழுது புலம்புகின்றோம்.

சோறு ஊட்டி கதைகள் சொன்ன
பாட்டி எங்கே என்று
உங்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்
பிள்ளைகள் தேடுகின்றார்கள்.
எத்தனை ஆண்டுகள் ஓடி
மறைந்தாலும் உங்கள் திருமுகம்
எங்கள் மனதைவிட்டு அகலாது


இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

-குடும்பத்தினர்.
(36957)(29-43-12-17)

## நீங்காத நினைவில் 31 ஆம் நாள்

தோற்றம் 28 - 09 - 1930



மறைவு 29 - 08 - 2004

அமரர்
### வைத்திலிங்கம் இராசரத்தினம்

(முன்னாள் சாரதி, சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

29.08.2004 அன்று சிவப்பேறு எய்திய அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி,
குப்பிளான்.

– குடும்பத்தினர்.
(C/36929)(43-12-17)

## தரம் 6 அனுமதி - 2005

2004 ஆம் ஆண்டு நடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எமது பாடசாலையில் விண்ணப்பப்படிவத்தைப்பெற்று அனுமதிக்காக 2004.10.15 இற்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்,
யாழ்/வேம்படி மகளிர்
[illegible]ர்தர பாடசாலை.

(C-37880) (38-12-17-43)

## நல்லூர் றோட்டறக்ட் கழகம் நடத்தும்

வருடாந்த மெய்வல்லுநர் போட்டி-2004

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் யாழ்.றோட்டறிக் குடும்பத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் மெய்வல்லுநர்ப் போட்டியின் இறுதி நிகழ்வும் 'பரிசளிப்பு வைபவமும்' திட்டஇயக்குநர் Rtr.PP.து.றமணன் தலைமையில் இன்று நடைபெறுகின்றன.

- இடம்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்
- காலம் : இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை
- நேரம : பி.ப 1.00 மணி (பு.நே.)
- பிரதமவிருந்தினர்: Rtn.PP.அ.பஞ்சலிங்கம் (உபதலைவர் யாழ்.றோட்டறிக்கழகம்)
- சிறப்பு விருந்தினர்கள்: திரு.பொ.கமலநாதன் (அதிபர், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி)

யாழ்.றோட்டறிக்குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : போட்டிகள் யாவும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12.00 மணிக்கு இடைநிறுத்தப்பட்டு மீண்டும் பி.ப. 1.00 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நல்லூர் றோட்டறக்ட் கழகம்.
(C-37881) (38-12-17-43)

Rtr.PP.து.றமணன்.
(திட்ட இயக்குநர்)

# சிங்கத்தின் பூதவுடல் தாங்கிய சவப்பெட்டியை நோர்வே தூதரகம் முன் வைத்து போராட்டம்

## இரண்டு மணி நேரம் அப்படியே கிடக்கவிட்டது ஈ.பி.டி.பி. அமைப்பு

கொழும்பு,செப்.28

கடந்த 23 ஆம் திகதி வெள்ளவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பியின் மத்திய குழு உறுப்பினர் சோமசுந்தரம் வர்ணகுலசிங்கத்தின் (தோழர் சிங்கம்) பூதவுடல் தாங்கிய சவப்பெட்டியை நோர்வேத் தூதரகத்தின் வாயில் கதவின் முன்பாகவைத்து நேற்று நண்பகல் அந்த அமைப்பினர் போராட்டம் நடத்தினர். பல மணி நேரம் அதே இடத்திலேயே இருந்த சவப்பெட்டி பின்னர் அங்கிருநது அகற்றப்பட்டது.

நேற்றுக் காலை ஈ.பி.டி.பியினரின் பார்க் வீதியில் உளள அலுவலகத்தில் கட்சி உறுப்பினர்களின் அஞ்சலிக்காகப் பூதவுடல் வைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து பூதவுடல் தாங்கிய சவப்பெட்டி கொட்டும் மழைக்கு மத்தியில் ஆதரவாளர்களால் நோர்வேத் தூதரகத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

நோர்வேத் தூதரகத்திற்கு முன்பாகச் சவப்பெட்டியை வைத்து அதன் முன்பாக மலர்வளையங்களையும் வைத்தனர் ஈ.பி.டி.பியினர். சிங்கத்தின் கொலையைக் கண்டித்துச் சில நிமிடங்கள் அங்கு நின்று கோஷங்களை எழுப்பினர். அதன் பின்னர் சவப்பெட்டியை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

கொட்டும்மழையில் நனைந்தபடி கிடந்த சவப் பெட்டிக்கு சில பொலிஸார் மட்டுமே காவலுக்கு நின்றனர். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் சவப்பெட்டி அந்த இடத்திலேயே இருந்தது. பின்னர் அங்கு வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சவப்பெட்டியை எடுத்துச் சென்றனர்.

பொரல்ல ஜயரத்ன மலர்சாலையில் இறுதிக்கிரியைகளுக்காக வைக்கப்பட்ட சிங்கத்தின் பூதவுடல் பின்னர் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (க-3)

## மேலும் 17 பங்களாதேசத்தவர்கள் கல்கிஸைப் பகுதியில் நேற்றுக் கைது!

கொழும்பு, செப்.28

மேற்கு நாடுகளுக்குச் செல்வதற்காகக் காத்திருந்த மேலும் 17 பங்களாதேஷ் நாட்டவர்கள் கல்கிஸைப் பகுதியில் நேற்றுப் பொலஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் வசம் இருந்த வீஸா காலாவதியாகி இருந்தது என்று பொலீஸார் தெரிவித்தனர். இலங்கைக் கடற்பரப்பின் ஊடாக இத்தாலிக்குக் கூட்டிச்செல்வதற்காக இவர்கள் முகவர்கள் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும் அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்தும் 10 லட்சம் ரூபா அறவிடப்பட்டிருந்தது என்றும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். கடந்த 24 ஆம் திகதியும் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து 61 பங்களாதேசியர்களைப் பொலீஸார் கைது செய்திருந்தனர். அவர்களும் மேற்கு நாடுகளுக்குச் செல்வதற் காகவே இலங்கையில் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவரும் நாடு கடத்தப்படுவதற்காக நீதிமன்ற உத்தரவின் பேரில் தற்போது மீரிகான தடுப்புமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். நேற்றுக் கைதுசெய்யப்பட்டவர்களும் அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்று பொலஸார் கூறினர். (க-3)

## ஆங்கில டிப்ளோமா வகுப்பு ஆரம்பம்

இடைநிறுத்தப்பட்டிருந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான டிப்ளோமா வகுப்புகள் எதிர் வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிப் போதனா நிலையத் தலைவர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக டிப்ளோமா வகுப்புக்கள் இடைநிறுத்தப் பட்டிருந்தன என்றும் அவர்களுடைய போராட்டம் முடிவுற்றதையடுத்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். (3-7)

## வயோதிபர் மரணம்

தென்மராட்சி,செப்.28

குளிக்கச் சென்ற வயோதிபர் கிணற்றில் தவறிவீழ்ந்து மரணமான சம்பவம் கடந்த சனிக்கிழமை பளை அல்லிப்பளையில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சிவகுரு சண்முகம் (வயது70) என்பவரே உயிரிழந்தவராவார். (3-117)

SHAMROCK
J/EACHCHAMODDAI.Rd.
A/L 2006
PHYSICS
'SOUND'
Mr.லெனின்
06-பொருளியல்
'சந்தைப்பொருளாதாரம்'
Mr.N.B.கஜீதரன்
(36912)

## பொது அறிவுப் போட்டி

சாவகச்சேரி,செப்.28

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலை ஆசிரியர்களிடையே பொது அறிவுப் போட்டிகள் நாளை புதன்கிழமை பி.ப.2மணிக்கு மூனறு பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. (3-31)

மோட்டார் சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்பு: 360/5, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.:0777-738146 (36949)

வீடு வாடகைக்கு

இரண்டு அறைகள் மற்றும் ஏனைய வசதிகளையுடைய நாற்சார வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:
இல.3,சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரியில் விசாரிக்கவும்) (36949)

# மரண அறிவித்தல்கள்

### செல்வன ஸ்ரீதரன் வர்ஜின்

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன் செல்வராணி தம்பதிகளின் அன்புப் புதல்வன் வர்ஜின் நேற்று (27.09.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சாருஜாவின் அன்புச் சகோதரனும் சண்முகம் - இராசமணி, செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு பேரனும் கிரிதரன் - ஜனிதா, பகீரதன் - பேபி தம்பதிகள், புவிதரன் ஆகியோரின் பெறாமகனும் ஆனந்தன் - தனுசா, திருவருள்நாதன் - குமுதினி, சண்முகவடிவேல் - குபேந்தினி, கிருஷ்ணா - குஜேந்தினி, ஜெயக்குமார் - குசேந்தினி தம்பதிகள், பாமினி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் இன்று (28-09-2004) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வேம்பிராய் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*
(39953)(43-12-17)

தகவல்:
சண்முகம் ஸ்ரீதரன் (தந்தை)
வலயக்கல்வி அலுவலகம்-தென்மராட்சி.
ஸ்ரீ அன்ட் பிறதேர்ஸ் சாவகச்சேரி.

### திருமதி சிவகுரு தில்லையம்மா

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு தில்லையம்மா நேற்று (27.09.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ருக்குமணிதேவி, மனோகரன், சற்குணவதி (கொக்குவில்), ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகசபை காலஞ்சென்ற சிவஞானம், லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3மணியளவில் கொக்குவில் VC முன்பாக உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*VC முன்பாக,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (36951)(35-12-17-43)

தகவல்:
சி.சற்குணவதி
(மகள்).

### குருநாதபிள்ளை சரவணபவன்

(EX.Employee Ceylon Tobcco Company)

குருவீதி, காங்கேசன்துறையைப்பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதபிள்ளை சரவணபவன் 26.09.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதபிள்ளை திருமதி ராசம்மாவின் அன்புப் புதல்வரும் ஆதிதேவியின் அன்புக் கணவரும் கார்த்திகா (அமெரிக்கா), பானு (H.N.B) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரகுமாரின் (அமெரிக்கா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், A.F.Raymond மலர்ச்சாலையில் இனறு (28.09.2004) செவ்வாய்க்கிழமை 10 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (29.09.2004) புதன்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை மூன்று மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(36955)(43-12-17)

தகவல்:
திருமதி ஆதிதேவி சரவணபவன்.
T.P.:2507146

திருமதி
### நல்லம்மா பூதப்பிள்ளை (லிற்ரில்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா பூதப்பிள்ளை அவர்கள் 26.09.2004 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி (அப்பர்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் தற்போது கனடாவில் வசித்து வரும் பூதப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற P.W.D.Inspector) பாசமிகு மனைவியும் ஜெயானந்தன், சுதாநந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுமித்திரா, டிலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஸ், சஞ்செய், சரீஸ், விதுஜா, இந்துஜா, அஜந் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற தங்கரத்தினம், இராஜேந்திரம், பரமேஸ்வரி, இராஜசிங்கம், இராசம்மா, சிவபாக்கியம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காசிநாதர், பொன்ராசர், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், அருந்தவரத்தினம், சிவகுமார் மற்றும் மகாலட்சுமி, மதிவதனி, ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*"கோகுலம்"*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.* (36958)(43-12-17)

தகவல்:
சகோதரர்கள்.

## பஸ் கட்டணங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்கு இடைப்பட்ட கட்டணம் ஒரு ரூபாவாலும் -

இருபத்தெட்டு முதல் நாற்பத்து நான்கு ரூபா வரையிலானவை இரண்டு ரூபாவாலும் நாற்பத்தைந்து ரூபாவிலிருந்து அறுபத்து நான்கு ரூபாவுக்கு இடைப்பட்ட கட்டணம் மூன்று ரூபாவாலும் அதிகரிக்கப்படும்.

அத்தோடு, அறுபத்தைந்து ரூபாவுக்கும் எண்பத்தெட்டு ரூபாவுக்கும் இடைப்பட்ட கட்டணம் நான்கு ரூபாவாலும் -

எண்பத்தொன்பது ரூபாவுக்கும் நூற்றுப்பதினொரு ரூபாவுக்கும் இடைப்பட்ட கட்டணம் ஐந்து ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏழு வீத கட்டண உயர்வுக்கே இப்போது இணக்கம் காணப்பட்டிருக்கிறது. தனியார் பஸ சங்கப் பிரதிநிதிகள் பதினைந்து சதவீத அதிகரிப்பைக் கோரினர் எனப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ரயில் கட்டணங்களும் அதிகரிக்கப்படும் எனவும் -

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் -

போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பேராசிரியர் டி.எஸ் ஜயவீர தெரிவித்தார்.

எரிபொருள்களுக்கான விலை அதிகரிக்கப்பட்டதையடுத்தே தனியார் பஸ் கட்டணங்களும அதிகரிக்கப்படுவதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்துசபை பஸ்க்களின் கட்டணங்களும் விரைவில் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கட்டண அதிகரிப்பு, குடாநாட்டிலும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது குறித்து நேற்றிரவு வரை தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

(க-3)


**புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்**

தரம் 5

பாடசாலைகளுக்கானது
தனியார் கல்வி நிறுவனங்களுக்கானது
தனிப்பட்டவர்களுக்கானது

தொகையாகவும் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நிறுவனங்கள், புத்தகசாலைகள், தனிப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி 3.10.2004

**சுந்தர் வெளியீடு**

844,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 7086


## திரும்பவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவினங்களைச் சமாளிப்பதற்காக ஐந்து வீத அதிகரிப்புக்கு ஏற்கனவே அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் அனுமதி வழங்கி உள்ளது.

ஆனால், அதன்பின் எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, பழைய முடிவின்படி, நடைமுறைப்படுத்தப்படும் ஐந்து சதவீதக் கட்டண உயர்வினால், இனிமேல் ஏற்படப்போகும் செலவின அதிகரிப்பைச் சமாளிக்கக் கூடியதாக இருக்காது என்கின்றன மின்சாரசபை வட்டாரங்கள்.

இதே காரணங்களைக் காட்டி தொலைபேசிக் கட்டணங்களும் விலைவில் அதிகரிக்கப் படவுள்ளன.

அரச திணைக்களங்கள் எரிபொருள்களின் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி ஏனைய சேவைகளுக்கும் கட்டண அதிகரிப்பைச் செய்கின்றன.

தனியார் பஸ்போக்குவரத்து சேவையினரும் கட்டண அதிகரிப்புக் கோரி பரந்த அளவிலான வேலைநிறுத்தப்போராட்டம் ஒன்றை நடத்தப் போகிறார்கள் என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அரசும், தனியார் துறையினரும் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து நியாய விலையில் பொதுமக்களுக்கு வழங்குவோம் என்று அரசு கூறிவருகின்றது. ஆனால், அதற்குச் சாத்தியம் இல்லை என்றும் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் அடுத்தவாரம் அரிசியின் விலை 60 ரூபாவைத் தாண்டிவிடும் என்றும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கறுப்புச் சந்தைக்காரர்கள், பதுக்கல்காரர்கள் போன்றோர் கோதுமை மாவுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் கிராமப் புறங்களில் 30 ரூபாவுக்கும் நகர்ப்புறங்களில் 27 ரூபாவுக்கும் மாவு விற்பனையாகின்றது.

சமையலுக்கான சகல வகையான காஸ் விலை அதிகரிப்பால் எல்லா ஹோட்டல்களிலும் சோறு முதல தேநீர்வரை சகல வகையான உணவுப்பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது, சாதாரண மற்றும் நடுத்தர வர்க்க மக்களின் அன்றாட வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

திடீரென ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைச் சமாளிக்க முடியாமல் திண்டாடும் அரசு மற்றும் பொது நிறுவனங்களின் ஊழியர்களின் நிலைமையைச் சமாளிக்க வேறு வழியேதும் இல்லாத நிலையில் சம்பள உயர்வு கோரிப் போராட்டம் ஒன்றை நடத்தவும் முஸ்தீபுகளைச் செய்துவருகின்றனர்.

இவ்வாறான சிக்கல்களைச் சமாளிக்க முடியாத நிலையில் அரசு விழி பிதுங்கிப் போயுள்ளது.

(க-3)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என மறுத்துவிட்டனர்.

இதையடுத்து, இந்த விவரத்தை எனக்கு அவர் அறிவித்தார். உடனடியாக எமது அலுவலகத்தில் பணிபுரியும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் பற்றிக்குடன் பொலீஸ்நிலையம் சென்றேன்.

அங்கு இருந்த யாழ். மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தயா செனவிரத்னவுடன் கதைத்து, அனுமதி பெற்று மேல் மாடிக்குச் சென்றோம்.

அப்போது அங்கு இருந்த பொலீஸார் எம்மைச் சூழ்ந்து கொண்டனர். என்னையும் பெரோஸையும் தாக்கினார்கள். பற்றிக்கைத் தள்ளிவிட்டு சிங்களத்தில் கெட்டவார்த்தைகளால் ஏசி அவமதித்தனர். சுமார் 40 பொலீஸார் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வழங்கிய அடையாள அட்டைகளைக் காட்டிய போதும், அதனைப் பொலீஸார் கவனத்தில் எடுக்கவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து நாங்கள் பொலீஸ் நிலையத்திற்கு முன் நின்றபோது, டிரக் ஒன்று அங்கு வந்தது. அதில் ஒருவர் ஏற்றிச் செல்லப்பட்டதைக் கண்டேன். - என்றார் அவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தமது தலைமையகத்துக்கும் பொலீஸ்மா அதிபர் மற்றும் பொலீஸ் சேவை ஆணைக்குழுவுக்கும் முறையிட்டுள்ளேன் என்றும் அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட குடும்பஸ்தர் 2000 ஆம் ஆண்டில கிரனேட் காட்டி கொள்ளையடித்தார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்.

பின்னர் 2003 ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தவர்.

அடுத்த தவணையில் நீதிமன்றில் சமுகமளிக்காததால் பகிரங்க பிடியாணை அவருககுப் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பிரஸ்தாப நபர் இணுவில் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். வெள்ளை வானில் வந்த பொலீஸார் அவரின் காலில் சுட்டுக் கைது செய்தனர் என்றும் -

பொலீஸ் நிலையம் சென்று விசாரித்த சமயம் பிரஸ்தாப நபர் தடுத்துவைக்கப்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர் என்றும் - அவரின் மனைவி தெரிவித்தார். (ஐ-3-7)

## வரதர் அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் குண்டு பாய்ந்த நிலையில் அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்த சுன்னாகம் பொலீஸார் சடலத்தை மீட்டு தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

உடுவில் பகுதியில் வசித்து வந்த இவர், சுன்னாகம் பொலீஸ் நிலையத்துக்கு அருகில் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை நடத்தி வந்தார். தமது குடும்பத்தினருடன் அங்கேயே அவர் வசித்துவந்தார்.

கொல்லப்பட்ட வல்லிசுந்தரம் வலி.வடக்குப் பிரதேசசபையின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இச்சம்பவத்தையடுத்து மருதனார்மடம், சுன்னாகம் பகுதிகளில் தீவிர பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

(ஐ-3-5-6-45-49-86)

## தமிழ்ச்செல்வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் ந.தமிழன்பன் (ஜவான்), ஊடகத்துறையைச் சேர்ந்த மிரேஷ் உட்பட 15 பேர் இடம் பெற்றுள்ளனர். இன்று நண்பகல் கொழும்பை அடையும் இக்குழுவினர், நோர்வே அனுசரணையாளரின் ஏற்பாட்டில் ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்படவிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## தமிழ்க் கூட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னச் செயலகப் பணிப்பாளர் நாயகமும்-

சகல கட்சிகளுக்கும் கடிதம் மூலம் அழைபபு விடுத்திருந்தனர்.

பிரதிநிதிகளை நியமிக்கும் இறுதித்தினம் கடந்த 24 ஆம் திகதி முடிவடைந்தது. எனினும், பெரும்பாலான கட்சிகள் தமது பிரதிநிதிகள் பற்றிய விவரங்களை அனுப்பவில்லை.

சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவின் செயலாளர் இது குறித்து மாவை சேனாதிராசாவுடன் நேற்றுத் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

கவுன்ஸிலில் இடம்பெறவிருக்கும் பிரதிநிதிகள் விவரங்களை அப்போது அவர் கோரினார்.

கவுன்ஸிலுக்குத் தமது பிரதிநிதிகள் எவரையும் நியமிப்பதில்லை என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்த கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்றும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முடிவுசெய்துள்ளன என்ற தகவலை மாவை சேனாதிராசா அவருக்குத் தெரியப்படுத்தினார். (ஐ-3)

## நகரில் முளைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பல வழக்குகளில் உணவகங்களில் இடம் பெறும் சுகாதாரச் சீர்கேடு, சட்டவிரோதமாகக் கட்டடம் அமைத்தல் தொடர்பான வழக்குகளும் அடங்குகின்றன.

இந்த வழக்குகளில் சம்பந்தப்படுவோர் திடீர் அப்பக்கடைகள் தொடர்பாகக் கேள்வி எழுப்புகின்றனர் என்றும் -

எனவே, அந்தக்கடைகள் சட்ட திட்டங்களுக்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளனவா? அவற்றின் சுகாதாரத் தரம் பேணப்படுகின்றதா? என்பதைக் கண்டறிந்து மாநகரசபை அதிகாரிகள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று நீதித்துறையினர் தெரிவித்தனர்.

அக்கடைகளைச் சட்டரீதியாக்க வேண்டும் அல்லது அவற்றை மூடவேண்டும்- என்றும் மாநகரசபை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் பட்டது.

இதுவிடயமாக இருவாரங்களுக்குள் நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மரண அறிவித்தல்

### சுப்பையா கண்ணகை



வேலங்குளம், நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா கண்ணகை அவர்கள் நேற்று (27.09.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பாலசிங்கம் (மருமகன்)
(தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை).

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. 0777 283605

(36959)


**வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்**

லிங்கன் கிறீம் ஹவுஸ் 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு எவ்வித கிளைகளும் கிடையாது. எனவே, சில போலிகள் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி தரக்குறைவான பொருளை விநியோகித்து வருகின்றார்கள். ஆதலால், இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்,
லிங்கன் கிறீம் ஹவுஸ்

(சி-37843)(32-13-17-30)



**O/L விஞ்ஞானம்**

**PAPER CLASS**

By:
இரா.செல்வவடிவேல்

ஆரம்பம்:
28.09.2004
செவ்வாய்
6.00 p.m.

**N.E.I.** நல்லூர்

(36904)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



தோற்றம் 27-12-1927 மறைவு 29-08-2004

### அமரர் பொன்னுத்துரை நாராயணலிங்கம்

(P.W.D. Overseer - Nuwaraeliya)

அமரர் பொன்னுத்துரை நாராயணலிங்கம் அவர்கள் கடந்த 29.08.2004 அன்று சிவபதம் அடைந்த செய்தியறிந்து நேரில் வந்து எங்கள் துயரில் பங்குகொண்டு உறுதுணையாய் தங்கியிருந்து ஆறுதல் அளித்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசி, தொலைத்தந்தி மூலம் எம் துயரில் கலந்துகொண்டோர் அனைவருக்கும் எமது நன்றியைத் [illegible]கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (28.09.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 [illegible] இல.75, லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (Saraswat[illegible]) அன்னாரின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியை நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து, அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"ரூபமகால்"
தேவாலய வீதி,
சங்கானை.

இல. 1/4 R Block
அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு-05

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**குறிப்பு:** அன்னாரின் 45 ஆம் நாள் பிரார்த்தனை, மதியபோசனம் சங்கானையில் அவரது இல்லத்தில் பின்னர் நடைபெறும்.

(சி-37867)(29-12-17)


**SCC விசேட சலுகைகளுடன் கணிப்பயிற்சி**

**பிரிவு II ஆரம்பம் 02.10.2004**

| Course | Course Fees | Duration |
|---|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | Course Fees Rs.1750 | 5 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | Course Fees Rs.2750 | 4 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | Course Fees Rs.5700 | 12 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | Course Fees Rs.3600 | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | Course Fees Rs.5700 | 4 Months |
| DIPLOMA IN VISUAL BASIC | Course Fees Rs.2750 | 4 Months |
| DIPLOMA IN VISUAL FOXPRO | Course Fees Rs.2750 | 4 Months |
| DIPLOMA IN AUTOCAD | Course Fees Rs.2750 | 4 Months |
| DIPLOMA IN C++ | Course Fees Rs.2750 | 4 Months |

மேலேயுள்ள பயிற்சி நெறிகளில் ஒன்றைத் தொடரும் மாணவர்கள் கீழுள்ள பயிற்சி நெறி ஒன்றை இலவசமாக கற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

**1.DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING**

AccPac + Quick Book Pro + MYOB

ஆகிய சர்வதேச Accounting Packages ஊடாக கற்பிக்கப்படும்

Duration 4 months

**2.DIPLOMA IN INTERNET E-MAIL**

Duration 2 months

Course Fee Free

**Soft View Computer College**

www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,0777846811

scclanka@hotmail.com
Arya Gowdar Road,
West mambalam Road,
Chennai 600 033, India.
T.P : +91-44-4891286


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.